

# திருக்கோயில்

டிசம்பர் 1986 ரூ. 2



முன்னைப் பழம்பொருட்கும்
    முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும்
    பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப்
    பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
    ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர்
    ஆவார்., அவருகந்து
சொன்ன பரிசே
    தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே
    எமக்கெங்கோன் நீ நல்குதியேல்
என்ன குறையும்
    இலோம் ஏலோர் எம்பாவாய்.

—திருவெம்பாவை 9

முன் அட்டை :

திருமகள், பூமகள் ஆகிய தேவியர் இருவருடன் திருமால் வீற்றிருந்து அருள்பாலிக்கும் திருக்காட்சி.

பின் அட்டை :

திருவண்ணாமலை ஆலயத் தோற்றம்.


# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 28 | திருவள்ளுவர் ஆண்டு 2017 அட்சய ஆண்டு மார்கழித் திங்கள் டிசம்பர் 1986 விலை ரூ. 2-00 | மணி : 12


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா ரூ 24.00 மட்டும்.

திருக்கோயில் இதழின் ஆயுள் சந்தா ரூ. 300 மட்டும்.

இதழ்கள் தவறாமல் கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்கவேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை. விற்பனையாளர்கள் மற்ற விவரங்களைத் தெரிந்து கொள்ள இவ்வலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## பொருளடக்கம்


பாரதப் போரில் பார்த்தசாரதி —டாக்டர் த. அமிர்தலிங்கம்

அன்பே சிவம் —மு. சண்முகம்

திருமண வரம் நல்கும் திருமணஞ்சேரி

வைகுண்ட ஏகாதசியும் திருஅத்யயண உற்சவமும் —திருமலை நல்லான் இராமகிருஷ்ண ஐயங்கார்

மார்கழி திருவாதிரை —திருமுருக கிருபானந்த வாரியார்

தாமரைத் திருவடிக் கீழ்.... —டாக்டர் இரா. கலைக்கோவன்

உசரவிளை முத்தாரம்மன் —டாக்டர் ஏ. என். பெருமாள்

எண் வகை போகம் — டாக்டர் பொற்கோ

நெல்லைச் சீமையில் ஓர் அபிராமிபட்டர் —டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

இளையான் குடிமாறநாயனார் —செவ்வேள்



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# பாரதப் போரில் பார்த்தசாரதி



டாக்டர் சு. அமிர்தலிங்கம்

(முன் தொடர்ச்சி)

பாரதப் போரில் நான்கு முதல் எட்டாம் நாள் வரை நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் இவ்விதழில் ஒருசேரத் தொகுத்துக் காணப் போகின்றோம்.

நான்காம் நாள் போரில் குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்ச்சி துரியோதனனின் தம்பிகள் ஐவரை வீமன் விண்ணுலகிற்கு அனுப்பி வைக்கும் வீர நிகழ்ச்சியாகும். பாண்டவர்கள் ஐவரையும் நாட்டை விட்டுக் காட்டில் வாடுமாறு அனுப்பி வைத்தான் துரியோதனன். அவனுடைய செயலுக்கு மாற்றுச் செய்வதைப் போல வீமனும் நான்காம் நாள் போரில் துரியோதனனின் தம்பிகள் ஐவரை வானகத்திற்கே அனுப்பி வைத்து விட்டான் என்று இந்நிகழ்ச்சியை வருணிக்கிறார் வில்லிப்புத்தூரார்.

''சேனாவிந்து சுதக்கணன் பொற்றேர்ப் பிங்கலசன்
சலாசந்தன்
ஆனா வீம வாகுவெனும் அடல்வாள் நிருபர்
ஐவரையும்
வானா டாளும்படி விடுத்தான் வன்பால் தம்மை
ஐவரையும்
கானாள் கென்ற காவலனைப் போல்வான்
வீரக் கழல் வீமன்'

(நான்காம் போர்ச் சருக்கம்)

வஞ்சகச் சூதினால் பாண்டவர்களின் நாடு நகரங்களைக் கவர்ந்து கொண்டதோடு, துரியோதனன் துரோபதையின் துகிலையும் உரிந்து அவமானப்படுத்திய அன்று வீமன், துரியோதனனையும் அவன் தம்பிகள் தொண்ணூற்றொன்பதின்மரையும் தான் ஒருவனாகவே வதைத்து அழிப்பதாக வீரசபதம் செய்திருந்தான். அந்த வீர சபதத்தை நிறைவேற்றி மகிழும் முதல் கட்டமாகச் சேனாவிந்து, சுதக்கணன், பிங்கலசன், சலாசந்தன் வீமவாகு ஆகிய துரியோதனனின் தம்பிகள்ஐவரை ஐந்து அம்புகளை ஏவிக் கொல்லுகிறான் வீமன்.

திருதராட்டிரனும் காந்தாரியும் போர்முடிந்த முன்இரவில் தம் மக்கள் ஐவர் மாண்டுபட்ட செய்தியை அறிந்து கலங்கித் துடிக்கிறார்கள். பாண்டவர்கள் ஐவரைக் குந்திதேவி பெற்றெடுத்த போதும் ''எனக்கு இளையவளான குந்திக்கு எனக்கு முன் பிள்ளைகள் பிறப்பதா?'' எனப் பொறாமை கொண்டு, தன் வயிற்றைக் கல்லினால் அறைந்து கொண்டவள்தான் காந்தாரி.

''.....அருந்தவப் பயனால் மைந்தர்
பெற்றனள் குந்தியென்னும் பேருரை கேட்ட
அன்றே
உற்றனள் பொறாமை, கல்லால் உதரமுட்
குழம்புமாறு
செற்றனள் தனது கேடும் ஆக்கமும் சிந்தியாதாள்''

(சம்பவச் சருக்கம், 70)

''தான் கருவுற்று ஆண்டுகள் இரண்டுக்கு மேல் ஆகியிருந்தும் எனக்குப் பிள்ளை பிறக்கவில்லை. குந்தி மாத்திரம் ஆண் மக்கள் ஐவரைப் பெற்று விட்டாளே'' என்று பொறாமை கொண்டவளாய்க் காந்தாரி, தான் இன்னதுதான் செய்கிறோம் என்பதையும் மறந்து, கல்லினால் வயிற்றை அறைந்து கொண்டாள். அவளுடைய கருப்பையும் கருவோடு சிதைந்து வெளியே விழுந்தது.

## பேரூராட்சிகளுக்கு வேண்டுகோள்

பெருமதிப்பிற்குரிய பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்கள், தங்கள் ஓ.மு. 13764/86 நாள் 25.7.86 இன்படி, திருக்கோயில் இதழை அனைத்துப் பேரூராட்சிகளும் வாங்கிப்பயனடைய ஆணை பிறப்பித்துள்ளார்கள். ''திருக்கோயில் இதழுக்கான ஆயுள் அல்லது ஆண்டு உறுப்பினர் கட்டணங்களை உயர்திரு ஆணையர் இந்துசமய அறநிலையஆட்சித் துறை, சென்னை-34 என்ற முகவரிக்கு அனுப்பி, ''திருக்கோயில்'' இதழின் உறுப்பினர்கள் ஆக அனைத்துப் பேரூராட்சிகளையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



தந்தம் உறியில் அவர்வைத்த தயிர்பால் வெண்ணெய் எட்டாமற்
குந்தி உரலின் மிசையேறி இளங்கோ வியர்முன் கூத்தாடி
நந்தன் மனையில் யசோதைஇரு நயனங் களிக்க விளையாடும்
மைந்தன் இருதாள் ஒருநாளும் மறவா தாரே பிறவாதார்.

(மூன்றாம் போர்ச் சருக்கம், கடவுள் வாழ்த்து)

அப்பொழுது அத்தினாபுரிக்கு வருகை புரிந்த வியாச முனிவர் 101 தாழிகளில் அக்கருப்பிண்டங்களைச் சேமித்து வைக்கக் கூறினார். அப்பிண்டங்களே துரியோதனாதியர் நூறு பேரும், அவர்களின் ஒரே தங்கை துச்சலையுமாகத் தோன்றுவதற்குக் காரணமானது. 'அன்றைக்கு எப்படிப் பொறாமையினால் வயிற்றில் காந்தாரி அறைந்து கொண்டாளோ, அப்படியே வீமனால் தன்னுடைய மக்கள் ஐவர் மாண்டு மடியநேரிட்ட இன்றைக்கும் கூட வயிற்றில் அறைந்துகொண்டு அழுகிறாள். ''குந்தி பெற்ற மக்கள் மட்டும் உயிரோடு இருக்க, நான் பெற்ற மக்கள் மடிவதா?'' என்பதாகக் காந்தாரி புலம்புவது காலம் மாறியும் மாறாத அவளுடைய பொறாமை குணத்தையே காட்டுகிறது.

''கொன்னே குந்தி மைந்தர் இருக்கக்
கொலையுண்டீர்
முன்னே முன்னும் முன்னம் முடிந்த தின்றென்னா
மின்னே யென்ன மெய்குலையா மண்மிசை
வீழ்ந்தாள்
என்னே என்னே யென்றினையா நின்றென்
செய்தாள்''

(நான்காம் போர்ச் சருக்கம், 40)

காந்தாரி கற்பெனும் குணத்தால் வீறு சான்றவளே. திருதராட்டிரனை அவள் மணம் கொண்ட நாளில், தன் கணவனுக்குக் கண் பார்வை கிடையாது என்பதைத் தெரிந்து கொண்ட அளவிலேயே, தன் கணவன் காணக் கொடுத்து வைக்காத உலகைத் தானும் காண வேண்டாம் என்பதாக உறுதிபூண்டு இயற்கையில் தான் குருடி அல்லாத போதும், துணிகளைக் கொண்டு தன் கண்களை இறுகக் கட்டிக் கொண்டு, அன்றிலிருந்து குருடியாகவே தன் ஆயுள் முழுதும் கழிப்பவளாகிய காந்தாரி, கற்பினால் வீறு சான்றவளே. ஆனாலும் பொறாமை மிகக் கொண்டவள். தன் மக்கள் தீய வழியில் செல்வதைத் தடுக்காத தாயவள். தன்னைப் போன்ற பெண்ணாகிய துரோபதைக்குத் தம் மக்கள் புரிந்த அவமானத்தையும் தட்டிக் கேளாத அரக்கியே காந்தாரி. அவளுடைய அந்தப் பாவத்திற்குத் தண்டனைதான் அவளுடைய மக்கள் நூறு பேரும் ஒருவர் பின் ஒருவராகவே அவள் காண மடிய நேரும் இச்சோகமாகும். புத்திர சோகத்தில் அடியெடுத்து வைக்கும் காந்தாரி, இனி அந்தத் துயரத்திலிருந்து மீளப் போவதே இல்லை.

''வீறார் கற்பின் மின்னனையாளை விறல் மைந்தர்
ஏறா மன்றிலேற்றவும் ஆம்அன்று எண்ணாதாள்
ஊறா வன்பிற் கண்ணறை மன்னன் ஒருதேவி
ஆறா வெள்ளத் துன்புற அன்றே அடியிட்டாள்''

(நான்காம் போர்ச் சருக்கம் 41)

ஐந்தாம்நாள் போரில் பாண்டவர் படை மகரவியூகமாக வகுக்கப்பட, துரியோதனன்படை கிரௌஞ்ச வியூகமாக வகுக்கப்படுகிறது. ஆறாம் நாள் பாண்டவர் படை சர்ப்ப வியூகமாக வகுக்கப்பட, கௌரவர் படை சகடவியூகமாக வகுக்கப்படுகிறது. ஏழாம் நாள் கௌரவர் படை கூர்ம வியூகமாக வகுக்கப்பட, பாண்டவர் படை அசுவ வியூகமாக வகுக்கப்படுகிறது. வியூகம் எப்படி வகுக்கப்பட்டாலும் என்ன? வீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் ஈடு கொடுக்க வல்லதோ கௌரவப் படை?

## ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வேண்டுகோள்

பெருமதிப்பிற்குரிய, ஊரக வளர்ச்சித்துறையின் ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்கள் கடிதம் எண். 52950-ம.தொ. 86-1 நாள் 3.9.86 வாயிலாகத் திருக்கோயில் இதழை அனைத்து ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் வாங்கப் பயனடைய ஆணை பிறப்பித்துள்ளார்கள். திருக்கோயில் இதழுக்கான ஆயுள்அல்லது ஆண்டு உறுப்பினர் கட்டணங்களை உயர்திரு ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34 என்ற முகவரிக்கு அனுப்பி, ''திருக்கோயில்'' இதழின் உறுப்பினர்கள் ஆக, அன்புடன் வேண்டுகிறோம்.

நாளுக்கு நாள் கௌரவர் படை சிதைந்து கொண்டும் குறைந்து கொண்டும் வருகிறதே அல்லாமல், அவர்களால் வெற்றியைக் காண முடியவில்லை.

தருமத்தின் காவலும், தருமத்தின் வடிவமான கண்ணபெருமானின் காவலும் துணை நிற்கும் போது, பாண்டவர்களின் வெற்றியை யாரால் தடுக்க முடியும்? வீரதுரோணரும்கூட அர்ச்சுனனின் வில்லாற்றலுக்கு ஆற்ற மாட்டாமல் ஒவ்வொரு நாளும் போரிட்டுத் தளர்ந்து போகிறார். நரகாசுரனின் மகனாகிய பகதத்தன் தன்னுடைய சுப்பரதீகம் என்ற யானையில் அமர்ந்து போர் செய்து, தன் பராக்கிரமத்தைக் காட்டிப் பாண்டவர் படையைச் சிறிது நாசப்படுத்துகிறான். ஆனால் கடோற்கசன் தன் மாயா வலிமையினால் ஆயிரக் கணக்கான யானைகளை உண்டாக்கி, அவை அனைத்தின் மீதும் தன்னுடைய மாயா வடிவங்களைத் தாங்கிப் போர் செய்யும்போது பகதத்தனும் தோற்று ஓடிப் போகிறான். மாவீரனாகிய சல்லியன், பாண்டவர் படையை எதிர்க்க, அவனுக்கும் தோல்வியே கிட்டுகிறது. எதிரிகளின் யானைகளையே தம் கைகளால் தூக்கியெறிந்து வீரப் போர் செய்யக் கூடியவனான வீமன் சல்லியனோடு அவனுடைய தேரையும் யானையைப் போலத் தூக்கி எறிந்து நாசப்படுத்துகிறான். தன் தம்பிமார் புடைசூழ துரியோதனன் வீமனை நெருங்கிப் போர் புரியவும், வீமன் நன்றாகப் புடைத்து வருத்தத் துரியோதனன் தோற்றோடுவதுமாக நாளும் போர் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

வீடுமர் ஒருவர்தான் கௌரவர் சேனையில் அர்ச்சுனனைத் தடுத்துப் போர் செய்யக்கூடிய பேராற்றல் வாய்ந்தவராகத் திகழ்கிறார். அவர் ஒருவர் மட்டும் இல்லையானால் துரியோதனனின் படைகளைத் தூசியென ஊதிவிட்டிருப்பான் அர்ச்சுனன். வீடுமர், தாருகாசுரன், மற்றும் இராவணனைப்போல் போர் புரிய, அர்ச்சுனன் முருகப் பெருமானைப் போலவும், இராமரைப் போலவும் போர் புரிகிறான் என இருவரையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார் வில்லிப்புத்தூரார்.

இவ்விருவர் செலுத்தும் அம்புகளால் காயப்படாத யானைகளும் இல்லை. கலக்கப்படாத தேர்களும் இல்லை., வெட்டுப்படாத குதிரைகளும் இல்லை. செத்துமடியாத பாகர்களும் இல்லை. நரனின் அவதாரமான அர்ச்சுனனும்,

வசுவின் அவதாரமான வீடுமரும் இவ்வாறு ஆற்றக் கூடிய வீரப்போரினைச் சொன்னாலும் நா நடுங்குமானால் காண நேர்ந்தால் என்னவாகும்?

''கரியணிக்குள் எக்கரிகள் புண்படா
கடவுத்தேரில் எத்தேர் கலக்குறா
பரிநிரைக்குள் எப்பரி துணிப்புறா
பாகர்தம்மில் எப்பாகர் வீழ்கலார்
நரனும் வெற்றிகூர் வசுவுமுற்றபோர்
நவிலுகினும் நா நடுங்குமால்''

(ஏழாம் போர்ச் சருக்கம், 17)

''வேறு போரினிப் பொருதல் வேண்டுமோ
விசயன் வீடுமன் என்னும் வீரர்தம்
சீறுபோரிடைத் திசையடங்கலும்
சிவந்தகோல மெய்க் கவந்தமாடுமால்
கூறுபோர் பொரக் கருதி வெங்களம்
கொண்டு தங்களிற் கொல்லலுற்ற நாள்
ஆறுபோரினும் பட்ட பேரினும்
ஆறுமடங்குபேர் அன்று பட்டதே.''

(ஏழாம் போர்ச் சருக்கம், 18)

ஏழாம்நாள் போரில் வீடுமரும் அர்ச்சுனனும் ஆற்றிய வீரப் போரினைக் கண்டு, தலையில்லாத முண்டங்களும் கூட எழுந்து நின்று ஆட்டம் போடுகின்றன. அன்று ஒரே ஒரு நாளில் மட்டும் இறந்து படுபவர்களின் தொகை, முதல் ஆறுநாட்களின் போரிலும் இறந்துபட்ட வீரர்களின் மொத்தத் தொகைக்கு இணையாக இருக்கிறது என்றால், ஏழாம்நாள் போரின் கடுமையை எப்படி வர்ணிப்பது?

எட்டாம் நாள் போர் வீமனுக்குக் கொண்டாட்டமான போர் என்றே சொல்ல வேண்டும். அன்றைய ஒருநாளில் மட்டும் துரியோதனனின் தம்பிகள் பதினைந்து பேரை எமனுலகிற்கு வீமன் அனுப்பி வைக்கிறான். முற்பகலில் நடைபெறும் போரில் சுந்தரன், விசாலக் கண்ணன், வீரவாசி, பௌதுண்டன், மகோதரன், மாகவிந்து, அபயன், ஆதித்த கேது ஆகிய துரியோதனனின் தம்பிகள் எண்மரை ''துரியோதனனுக்கு நீங்கள் முதலில் போய் இடம் பிடித்து வையுங்கள்'' என்பதாகக் கூறிச் சாகடிக்கிறான். பிறகு அன்றைய தினமே பிற்பகலில் நடைபெற்ற போரில் குண்டலபோசன், அனாதியக்கன், தீர்க்கநயனன், திம்மவாகு, குண்டலன், குண்டலாதரன், கனகத்துவசன் ஆகிய எழுவரை எமனுலகிற்கு அனுப்பி வைக்கிறான்.

தன் தம்பிகள் இவ்வாறு வீமனால் கோரமாகக் கொல்லப்படுவதைத் தடுக்க முடியாத துரியோதனன், விழிகளில் இரத்தம் கசிவதைப்போன்ற துன்பம் பெருக, வீடுமரிடம் போய் முறையிடுகிறான். ''தாத்தா! நீங்கள் தானைத் தலைவராக இருப்பதனால் எனக்குத் தோல்வியில்லை என்று நினைத்திருந்தேனே! ஆனால் நடந்து கொண்டிருப்பது என்ன? என் தம்பிகளைக் குழுவினராகக் குழுவினராகப் பிரித்து, வீமன் சாகடித்துக்கொண்டிருக்கிறானே! என் தாயாகத் தந்தையாகத் திகழும் உங்களிடம் அல்லாமல் என் குறையை யாரிடம் போய் முறையிடுவேன்?''

இவ்வாறு வருத்தப்பட்டுக் கொள்ளும் துரியோதனனை வீடுமரும் தேற்றுகிறார். ''வருந்த வேண்டாம் துரியோதனா! வருந்த வேண்டாம். போரே வேண்டும்என்று அடம் பிடித்ததும் நீதான். கண்ணன் சமாதானத்திற்காகத் தூது வந்தபோது, ஆண்மையிருந்தால் பாண்டவர்கள் இழந்த நாட்டை அவர்களே போர் செய்து பெற்றுக் கொள்ளட்டும் என்பதாக அன்று ஆண்மை பேசினாய்! இப்பொழுதோ தம்பிகள் சாகிறார்களே என்று வந்து கலங்கித் துடிக்கிறாய்! போரில் வெற்றியும், வீர மரணமும் உண்டாவது சகஜம்தானே! இயன்ற அளவு பகைவரைக் கொல்ல வேண்டும். இயலாத போது நாமும் நம் தலை வேறு, உடல் வேறாக வீரமரணம் அடைதல் வேண்டும். வீரமரணம் பெறுதலாகிய பெறுதற்கரிய பேற்றினைத் தானே உன் தம்பிகள் பெற்றிருக்கிறார்கள். இதற்காக வருந்தித்துன்பம் கொள்ளல் ஆமோ?''

''துரியோதனா! உனக்கு இன்னும் சில நான் சொல்ல விரும்புகிறேன். அவை உன் செவிகளுக்கு கேட்கக் கசப்பாகக் கூட இருக்கலாம். நீ அருந்ததிக்கு ஒப்பான கற்புக்கரசி துரோபதையின் கண்ணீரைப் பெருகச் செய்தாய்! அந்தப் பாவத்திற்கான தண்டனைகளே இவை. பெரியோரின் அறிவுரைகளை துச்சமென மதித்த நீ, நம்பியதெல்லாம் கர்ணனையும் சகுனியையும், உன் தம்பி துச்சாதனனையும்தான். நீங்கள் நால்வரும் செய்த பாவம், இன்னும் என்னென்ன துன்பங்களை உண்டாக்கப் போகிறதோ? விதுரனை வசை பாடி, வில்லொடித்துப் போகச் செய்து விட்டாய்! கர்ணனோ நான் உயிரோடு இருக்கும் வரையில் வந்து போரில் கலந்து கொள்ள மாட்டான்! அங்கே வீமனும் விசயனும் ஆற்றக்கூடிய வீரப்போருக்கு நிகராகப் போர்புரியக் கூடியவர்கள் இங்கே யார் இருக்கிறார்கள்? அறம் வளர்க்கும் தருமன் இருப்பதும் அங்கே. துளபமாலை திருநெடுமால் இருப்பதும் அங்கே! அவர்களுக்குத் தோற்றுப் பலியாகக் கூடியவர்கள் தானே அனைவரும் இங்கே! அப்படியிருக்க வீணாகக் கவலை கொள்வது ஏதற்குத் துரியோதனா எதற்கு? தைரியமாகப் போர் புரிவோம்வா! மரணம் வருமானாலும் தைரியமாக ஏற்றுக்கொள்வதே வீரர்களுக்கு இலட்சணம்.''

வீடுமர் இவ்வாறு விரிவாகத் துரியோதனனுக்கு அறிவுரை கூறுவதற்கும் காரணம் இருக்கிறது! அவர் இன்னும் இரண்டே நாட்கள்தான் துரியோதனனின் தானைக்குத் தளபதியாக இருக்கப் போகிறார்! பத்தாம் நாள் போரில், அவர் களத்தில் அர்ச்சுனன், சிகண்டி இருவரின் அம்புகளுக்கும் இலக்காகிச் சாயப் போகிறார். வீடுமர்

## பணிவின் பெருமை

தண்ணீர் இறைக்கும் ஏற்றம் பணிவதனால் கிணற்றிலுள்ள நீரை முகக்கின்றது. அங்ஙனம் ஆன்றோர்களிடம் பணிந்தால் அவர்கள் பால் தேங்கிக் கிடக்கும் அறிவு வெள்ளத்தை நாம் முகந்து கொள்ளலாம். பணிவதால் நமக்கு ஒன்றும் இழிவு வந்து விடாது.

—**சுவாமி விவேகானந்தர்**

விரும்பினால் ஒழிய மரணம் அவரை அணுகாது., இது வீடுமருக்கு அவருடைய தந்தை சந்தனு வழங்கிய வரம். ஆனால் வீடுமர் போர் தொடங்கிய முதல் நாளில் கண்ணபெருமானிடம் பத்தாம் நாள் போருடன் தம்முடைய பணியை முடித்துக் கொண்டு விடுவதாக உறுதி கூறியதை முன்னமே பார்த்தோம் அல்லவா! ஆகவேதான் துரியோதனனுக்குப் புத்திமதி கூற இனி ஒரு சந்தர்ப்பம் வாய்க்காது என்பதனாலேயே வீடுமர் இதுவரைதான் அடக்கி வைத்திருக்கும் மனக் குமுறலை எல்லாம் துரியோதனனிடம் கொட்டி விடுகிறார். எவ்வளவு எடுத்துரைத்தாலும் துரியோதனன் போரைக் கை விடான் என்பதும் வீடுமருக்குத் தெரிந்தே இருக்கிறது. அதனால்தான் ''சரி சரி வா, போரைத் தொடர்ந்து செய்து வீர மரணம் அடைவோம்'' என்று துரியோதனனிடம் கூறக் காண்கிறோம்.

இவ்வாறான ஆறுதல் மொழிகளைக் கூறி, வீடுமர் தளர்ந்து போன துரியோதனனையும் அவனுடைய படைகளையும் உற்சாக மூட்டிப் போரில் ஈடுபடுத்துகிறார். வீமனின் வீரமைந்தன் கடோற்கஜனும், அர்ச்சுனனின் அன்பு மைந்தன் இராவானும், தம்முடைய மாயா வலிமையைக் காட்டி, ஆயிரக்கணக்கான வடிவங்கள் தாங்கித் துரியோதனனின் சேனைகளைத் துவம்சம் செய்வது, பார்த்துப் பரவசமடையத் தககாய் திகழ்கிறது.

''காயிருங் களிற்றின் மேலான் கடோற்கசக்
காளை தானோர்
ஆயிரம் வடிவமாய் முந்தி அரசர் பேரணியை
எல்லாம்
தோயிருட் பிழம்போ டுற்ற சோனையம் புயலிற்
தோன்றி
மாயிரு விசும்பிற் தாரா கணமென மாய்த்து
வந்தான்''

''ஒருபுடை இவன் போர் செய்ய ஒருபுடை உரக
கன்னி
அருளுடை மைந்தன் எண்ணில் ஆயிரம் உருவமாகி
இருபுடை யினும் போர்வேந்தர் எலிகள்போல்
ஏங்கி அம்பாற்
பொருபுடை உருண்டு போகப் பொருவில்
வெம்பூசல் செய்தான்''

(எட்டாம் போர்ச் சருக்கம். 17,18)

கடோற்கஜனும், இராவானும் ஒரு வடிவத்துடன் போர் செய்தாலே கௌரவர் சேனை கதிகலங்கிப் போகும் என்றால், அவர்கள் ஆயிரம் ஆயிரம் வடிவங்களைத் தாங்கிப் போர் செய்வார்கள் ஆனால், கௌரவ சேனைகளின் நாசத்திற்குக் கேட்கவா வேண்டும்? நட்சத்திரக் கூட்டமென மிகுந்திருக்கும் துரியோதனனின் சேனைகளைப் புயல்போல் சீறி அழித்து மாய்க்கிறான் கடோற்கஜன். நாகக்கன்னியின் மகனான இராவானும் பகைமன்னர்களை எலிகளைப் போல் சிதறி ஓடிப் போகுமாறு வதைத்தழிக்கிறான்.

சிதறி ஓடும் கௌரவப் படைகளை எல்லாம் ஓடாதவாறு தடுத்து நிறுத்தி இராவானைக் கொல்வதாக வீரம் பேசி, அவர்களை மறுபடியும் போருக்கு அழைத்து வருகிறான் அலம்புசன் என்ற அரக்கன். இவ்வரக்கன் வேறு யாருமில்லை. வீமனால் முன்பு வேத்திரகிய நகரில் சாகடிக்கப்பட்ட பகாசூரன் என்ற அரக்கனின் தம்பிதான் இந்த அலம்புசன்.

## பக்தியின் அடிப்படை

தங்கரதமும் தேவாமிர்தமும் கிடைப்பதற்கல்ல நமது முன்னோர் பக்தி செய்யச் சொன்னது. மனிதனாக வாழ்வதற்கு இன்றியமையாத நெறிகளைத் தருவதுதான் பக்தியின் அடிப்படை.

— சுவாமி விவேகானந்தர்

பகாசூரன் வேத்திரகிய நகருக்குப் புறத்தே இருந்ததொரு வனத்தில் வசித்து வந்தான். இவன் தனக்குப் பசி உண்டான நேரத்தில் எல்லாம் நகருக்குள் நுழைந்து எதிர்ப்பட்டவர்களை எல்லாம் கொன்று பசியாறி வந்தான். இவனால் வேத்திரகியத்து மக்கள் எல்லாம் தினம்தோறும் சாவை எண்ணிப் பயந்து நடுங்கிக்கொண்டிருக்க நேர்ந்தது. ஒருநாள் துணிவாக வேத்திரகியத்து மக்கள் எல்லாம், பகாசூரன் பசிதீர்ந்து அவனுடைய குகையில் இளைப்பாறிக்கொண்டு இருந்த நேரத்தில் அவனிடம் போய் 'பகாசூரரே! தினந்தோறும் உமக்கு வேண்டிய ஒரு வண்டிச் சோற்றையும் நரமாமிசமாக நீ உண்ண உயிரோடு ஒரு ஆளையும் நாங்களே முறைவைத்து அனுப்பி விடுகிறோம். நீ நகருக்குள்ளே வரவேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டார்கள். பகாசூரனும் தான் நோகாமல் புசிப்பதற்கு அந்த யோசனை நன்றாகவே இருந்ததால் அதற்கு ஒத்துக் கொண்டான். வேத்திரகிய மக்களும் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒருநாள் முறை வைத்துப் பகாசூரனுக்கு ஒரு வண்டிச் சோறும், அவன் கடித்து ருசிப்பதற்கு வாட்டசாட்டமான ஒரு ஆளையும் தவறாமல் அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்படியான நேரத்தில் தான் பாண்டவர்கள் தம் தாயார் குந்திதேவியுடன் துரியோதனனின் அரக்கு மாளிகைச் சதியிலிருந்து தப்பி வேத்திரகிய நகருக்குச் சென்றார்கள். துரியோதனனுக்குத் தாங்கள் உயிரோடு இருப்பது தெரியக் கூடாது என்பதனால் பாண்டவர்கள் அந்தணர் வடிவம் தாங்கி பார்ப்பினி ஒருத்தியின் வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தபோது தான் பகாசூரனைப் பற்றிய வரலாறு அவர்களுக்குத் தெரிய வந்தது.

அன்றைய தினம் பகாசூரனுக்குப் பலியாகப் பார்ப்பினி தன் ஒரே ஒரு மகனை அனுப்ப வேண்டுமே என்று வருத்தப்பட்டு அழுது கொண்டிருந்தாள். அவளுடைய துயரத்தைக் கண்ட குந்தி தன் மகன் வீமனைப் பகாசூரனிடம் அனுப்புவதாகக் கூறி அவளைத் தேற்றினாள். பகாசூரன் உண்ணவேண்டிய ஒரு வண்டிச் சோற்றைத் தான் உண்ண ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்ததே என்பதால் வீமனும் மகிழ்ந்து அதற்கு ஒத்துக் கொண்டான். பகாசூரனுக்காகத் தயாரிக்கப்பட்ட உணவுகளை எல்லாம் வண்டியில் வைத்து எடுத்துக் கொண்டு வீமனே பகாசூரனின் குகைக்குப் போனான். பகாசூரனிடம் தன்னையும், உணவுகளையும் ஒப்படைக்க வேண்டிய வீமன், அதற்கு மாறாக ஒரு மரநிழலில் அமர்ந்து ஒரு வண்டிச் சோற்றையும், சாம்பாரை விட்டுப் பிசைந்து கறி பதார்த்தங்களுடன் ''ஆஹா! இப்படிச் சாப்பிட்டு எவ்வளவு நாட்கள் ஆகிறது!'' என்பதாக எண்ணி மகிழ்ச்சியுடன் உணவை வயிற்றுக்குள் அனுப்பும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டான்.

குகையை விட்டு அப்பொழுது வெளியே வந்த பகாசூரன் தன்னுடைய உணவை எவனோ ஒருவன் உண்டு கொண்டிருப்பதைக் கண்டு வெகுண்டு 'ஏய்' யாரடா நீ? புலிக்கு அனுப்பப்பட்ட இறைச்சியைப் பூனை அபகரித்து உண்பதைப்போல உண்டுகொண்டிருக்கிறாய்?'' என்பதாக ஆரவாரம் செய்து, வீமனுடைய பிடரிகளில் மாறி மாறிப் பல குத்துக்களையும் விட்டான்; வண்டிச் சோற்றை வயிற்றுக்கு அனுப்பும் வேலையை அப்பொழுதும் கைவிடாதவனாகிய வீமன் ''சாப்பிட்டு முடிவதற்குள் என்னடா சண்டைக்கு மிகவும் அவசரப்படுகிறாய்? இதோ வருகிறேன்.'' என்பதாகக் கூறி, ஒரு பருக்கையும் மிச்சம் இல்லாமல் உண்டு முடித்த பிறகே பகாசூரனுடன் மல்யுத்தம் செய்யலானான்.

மரத்தை வேரொடு பிடுங்கி வீமனும் பகனும் சண்டை செய்தார்கள். அவர்கள் பாறைகளைத் தூக்கியெறிந்தும் போர் செய்தார்கள். வாயு குமாரனான வீமன் தன் தந்தையை விடவும் பலம் வாய்ந்தவன். வீமன் உதைத்த உதைகளால் பகாசூரனின் விலா ஒடிந்தது., பரந்த மார்பும் முறிந்தது. முதுகும் முறிந்தது., இரண்டு கன்னங்களும் ஒடிந்தது. பற்கள் அத்தனையும் சிதறிப் போக பகாசூரனின் வாயில் இரத்தவெள்ளமே வழிந்தது. பகாசூரனை கீழே தள்ளி, அவன் மார்பின் மேல் மண்டியிட்டு அமர்ந்து, பகாசூரனுடைய கழுத்தை 'நற நற' வெனத் திருகி, அவனை வதைத்தழித்தான் வீர வீமன்.

••

அப்படி வீமனால் மாய்த்து ஒழிக்கப்பட்ட அரக்கன் பகாசூரனின் தம்பிதான் அலம்புசன் என்ற இந்த அரக்கன், தன் அண்ணனைவதைத்த வீமனைப் பழிதீர்க்க வேண்டும் என்பதற்காகத் துரியோதனனுடைய அணியில் சேர்ந்து அவன் சமர் செய்து கொண்டிருக்கிறான். 'இராவானை நான் அழிக்கிறேன்'' என்பதாக அந்த அலம்புசன் தான் இப்பொழுது ஆர்ப்பரித்து தோள் தட்டுகிறான். அவனும் கடோற்கசன், இராவானைப் போல மாயைப் புரிந்து ஆயிரம் ஆயிரம் வடிவங்களை எடுக்க வல்லவனே. இந்த அலம்புசனும், இராவானும் செய்யக் கூடிய யுத்தத்தைக் கண்டு களிப்பதற்காகத் தேவர்கள் எல்லாம் வந்து வான வெளியில் திரண்டு நிற்கிறார்கள். இவ்விருவரின் வீரப் போரை நாமும் வரும் இதழில் விரிவாகக் கண்டு களிக்கலாமே!

—(தொடரும்)

# பூலோகக் கைலாயம்

நம்முடைய தலங்கள் பலவற்றைப் பறவைகளும், விலங்குகளும், ஊரும் ஐந்துக்களும் வணங்கி வழிபட்டுச் சிறப்படைந்துள்ளன. அவற்றில் சில வருமாறு :

| | | |
|---|---|---|
| கழுகுகள் வழிபட்ட தலம் | — | திருக்கழுக்குன்றம் |
| சம்பாதி, சடாயு என்ற பறவைகள் வழிபட்ட தலம் | — | புள்ளிருக்கு வேளூர் |
| சிலந்தியும் யானையும் வழிபட்ட தலம் | — | திருவானைக்கா |
| யானை, பாம்பு, சிலந்தி இம்மூன்றும் வழிபட்ட தலம் | — | திருக்காளத்தி |
| பாம்பு வழிபட்ட தலங்கள் | — | நாகப்பட்டினம், நாகேச்சுரம், திருப்பாம்புரம் |
| மயில் வழிபட்ட தலம் | — | மயிலாடுதுறை, மயிலாப்பூர் |
| காமதேனு வழிபட்ட தலம் | — | கருவூர்ஆனிலை |
| பசுக்கள் பூசித்த தலம் | — | திருஆமாத்தூர் |
| எறும்பு வழிபட்ட தலம் | — | திருவெறும்பியூர் |
| வாலியார் வழிபட்ட தலம் | — | வடகுரங்காடு துறை. |
| குரங்கு, அணில், காகம் இம்மூன்றும் வழிபட்ட தலம் | — | திருக்குரங்கணில் முட்டம் |

# அன்பே சிவம்

*சண்முகம்,*

கணக்கு அலுவலர்,

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை,

சென்னை-34.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

என்ற திருமூலர் வாக்கின்படி அன்பே சிவம் என்று அறிதல் எளிதன்று. அன்பும் சிவமும் இரண்டென்றே எண்ணி வந்த மாந்தரை, அறியாமையினை விட்டொழித்து இரண்டும் ஒன்றே என்று சிந்திக்கத் தூண்டுகிறார் திருமூலர். அன்பு உருவம் உடையதன்று. தேடிக் கண்டு பிடிக்க முடியாதது. அது ஒரு உணர்ச்சி. அதனை உணர்ந்து தான் பார்க்க முடியும். அது வேறுபாடு காண்பதில்லை. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று பிரித்துப் பார்ப்பதில்லை. கொடுத்துக் குறையாதது அன்பு. பிரித்து குறைக்க முடியாதது. ஒரு காலத்தில் இருந்து பிறகு அழிந்து விடுவது இல்லை. அன்பின் வழியது உயிர்நிலை என்ற வள்ளுவர் வாக்கால் சிறப்பது அன்பு. உயிர்கள் நிலைபேறாக இருக்க உதவுவது அன்பு.

''ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்'' என்றார் வடலூர் ராமலிங்க அடிகள். ''உயிர்களிடத்து அன்பு வேண்டும்'' என்றார் பாரதி. உயிர்கள் என்ற பொதுப்பெயரில் ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த மனிதர் வரை அடங்கும். அந்த பரிசுத்தமான அன்பு வித்தியாசம் பார்க்காது எல்லா உயிரினையும் ஒன்றென்று எண்ணும். அன்பாகிய மலரின் வாசம் யாவருக்கும் உரியது. அருகில் நெருங்குவோர் அதன் வாசத்தை நன்குணர்வார்கள். தூரத்தில் நிற்பவர்களுக்குக் கூட அந்த வாசனை லேசாக வீசும். அது உயர்ந்து நிற்கும் மலர். தனியொருவரோ கூட்டமோ அதனை தன் வசப்படுத்திக் கொண்டு மற்றவர்க்கு கிடைக்காதபடி செய்து விட முடியாது. அன்பு அச்சமற்றது. அன்பு ஓர் வெள்ளப்பெருக்கு. அதன் கரையில் நிற்போர் கூட அதனை உணர்வோரே. ஆனால் அது ஓர் இன்பப்பெருக்கு. அதனால் இன்னலுற்றோரே இல்லை. மாறாக அப்பெருக்கு 'நான்' 'எனது' 'என் குடும்பம்' 'என் நாடு' 'என் கொள்கை' 'எனது சமயம்' 'மதம்' எல்லா வித சுயநலங்களையும் அடித்துக் கொண்டு போகும். எஞ்சி நிற்பது உயிர்களும் அன்புமே. அங்கே வேற்றுமை இருக்காது. ஏற்றத்தாழ்வு இருக்காது. சமரச சன்மார்க்கமே எஞ்சி நிற்கும். இந்நிலையே உயரிய நிலை. இந்த நிலையே கடவுள் நிலை. அது தான் சீவர்கள் அடைய எண்ணும் சிவம்.

அந்த அன்பு என்பது புதுமை வாய்ந்தது. பசுமை நிறைந்தது. உயிர்த் துடிப்புக் கொண்டது. நேற்று இன்று நாளை என்று அதற்கு இல்லை. சிந்தனைக்கும் குழப்பத்திற்கும் அப்பாற்பட்டது. சிந்தனை எப்போது தன்னைத்தான் உணர்ந்து இயல்பாகவே ஒழிகின்றதோ அங்கே அன்பு தோன்றுகிறது. சிந்தனை அற்றதினால் காலமும் அற்ற அந்த அன்பு அப்போர்து அறியப்படுகிறது. இதுவே சீவன்முக்த நிலை. 'அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு'' என்றார் வள்ளுவர். மனம் தன் வசம் இழந்து மயங்கிய ஓர் பரவச நிலையே அன்பு. அதில் 'தான்' தன் உடல்' 'தன் பொருள்' என்ற சுயநல சிந்தனையே இருக்காது. பிற உயிர்கட்கு என்ன தொண்டு செய்வது என்ற விருப்பே இருக்கும். இந்த தன் வசம் இழந்த தன்னை மறந்த அன்பு நிலையே தெய்வ நிலை. இதனையே சீவன் முக்த நிலை என்றனர் பெரியோர். தனக்கென வாழாப் பிறர்க்குரியோராய் வாழ்ந்த பெரியோர்களில் பலர் இந்நிலை அடைந்தவர்களே. இந்நிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே ஒன்றும் இல்லை. மணிவாசகப்பெருந்தகையும் சிவபெருமானை ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே'' என்றே அழைத்தார். எனவே அன்பு மண்ணில் விளைந்த ஆர் அமுதே சிவம். அன்பே சிவம்.

சிவமே சீவனை ஆக்கிக் காத்து அழித்து மீண்டும் ஆக்குகிறது. எனில் சிவனும் சீவனும் வேறு வேறு அல்ல. சிவமே சீவன், சிவம் என்பதனை மணிவாசகர் 'தன்னேர் இல்லோன்'' ''சொற்பதம் கடந்த தொல்லோன்'' ''சித்தமும் செல்லாச் சேட்சியன்'', ''மருவி எப்பொருளும் வளர்ப்போன்'' ''நூலுணர்வு உணரா நுண்ணியோன்'', ''அந்தமும் ஆதியும் அகன்றோன்'' ''யாவரும் பெறவுறும் ஈசன்'' ''அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டு தொண்ட உழவர் ஆரத்தந்த அண்டத்து அரும் பெறல் கோமான்'' ''நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன்'' ''அச்சம் தவிர்த்த சேவகன்'' ''பூவில் நாற்றம் போன்று உயர்ந்தெங்கும் ஒழிவற நிறைந்து மேவிய பெருமை'' என சிவனது தூல சூக்குமத்தை வியந்தும் தனது திருவாசக திருஅண்டப் பகுதியில் பலவாறாக விளக்குகிறார். இத்தன்மையாக விளக்கப்படும் சிவத்திற்கும் ''அன்பு'' என்ற நமது முற்பகுதி விளக்கத்துக்கும் வேறுபாடு ஏதும் உளதோ என்று அன்பர்கள் ஆய்ந்து அன்பும் சிவமும் ஒன்றே என்று உறுதி பூண வேண்டுமாய் குருநாதர் திருவடிகளை பணிந்து வேண்டுகிறேன்.

— — — — —

# மார்கழித் திருவாதிரை

திருமுருக கிருபானந்தவாரியார்

காருற்ற ஆணவக் கருவறையில் கண்ணில்லாக் குழந்தையைப் போல் கட்டுண்டு கிடந்த ஆன்மாக்களுக்குக் கருணைக்கடலாகிய இறைவன் தநுகரணபுவன போகங்களை யருளி ஐம்பெருந் தொழில்களை யயர்கின்றான். அவை இறைவனுக்கு விளையாட்டு போல ஆயாசமின்றி நடைபெறுகின்றன. ''காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி'' என்பார் மாணிக்கவாசகர்.

திருக்கோயில்களில் நாள்தோறும் நடந்து வரும் வழிபாடுகள் இந்த ஐம்பெருந்தொழில்களையே உணர்த்தி நிற்கும்.

1. வைகறையில் பள்ளியறையின் திருக்காப்பு நீக்கித் தரிசிக்கப்பெறுதலாகிய ''திருவனந்தல்'' என்று சொல்லப்பெறுகின்ற திருப்பள்ளியெழுச்சி அருளை (அநுக்கிரகத்தை)க் குறிக்கும்.

2. பின்னர் அபிஷேகம் முதல் நடைபெறும் வழிபாடு படைத்தல் என்ற சிருட்டியைக் குறிக்கும்.

3. அதற்குப் பின் அடுத்த காலம் முதல் அர்த்தயாமப் பூஜைக்கு முன் நிகழ்கின்ற வழிபாடுகள் யாவும் காத்தல் என்ற திதியைக் குறிக்கும்.

4. அர்த்தயாம வழிபாடு அழித்தல் என்ற சங்காரத்தைக் குறிக்கும்.

5 பள்ளியறை வழிபாடு திரோபவம் என்ற மறைத்தலைக் குறிக்கும்.

இவ்வாறு ஆண்டவன் அருளால் அயரும் ஐம்பெருந்தொழில்களின் குறிப்பே கோயில் வழிபாடுகள் என வுணர்க.

இனி தேவர்களுக்கு ஒருநாள் நமது வருடமாகும். தை முதல் ஆனி வரை பகல்; ஆடி முதல் மார்கழி வரை இரவு ஆகும். இந்த முறையில் மார்கழி மாதம் விடியற்காலமாகும். ஆண்டு முழுவதும் அவ்வம்மாதங்களில் செய்யும் விழாக்களும் இந்த ஐம்பெருந்தொழில்களையே உணர்த்தும்.

1. மார்கழி மாதம் விடியற்காலையாதலினால் அம்மாதத்தில் நிகழும் திருவாதிரை விழா அநுக்கிரகம் என்ற அருளல் ஆகிய இனிய தொழிலையுணர்த்தும்.

2. தை மாதம் நிகழும் விழா படைப்பு(சிருஷ்டி)

3. மாசி மாதம் முதல் ஐப்பசி மாதம் வரை நிகழும் விழாக்கள் காப்பு (திதி)

4. கார்த்திகை மாதத்தில் நிகழும் விழா அழித்தல் (சம்மாரம்)

5. கார்த்திகை மாதத்தில் உற்சவ முடிவாகிய திருக்கார்த்திகையின் மறுதின முதல் மார்கழி மாதத்தின் திருவாதிரைத் திருவிழா கொடியேற்றத்தின் முன்னாள் வரையிலுள்ள நாட்கள் திரோபவம் என்பதை (மறைத்தலை) உணர்த்தும். திரோபவம் நீங்க மற்ற சிருஷ்டி முதலிய நான்கினுள்ளும் ஐம்பெருங் தொழில்களின் தூல நிலைகள் காட்டப்பெறுகின்றன.

1. கொடியேற்றுதல்—சிருஷ்டி
2. நிவேதனங்கள்-திதி
3. கிருட்டிணகந்தம்-சம்மாரம்
4. தேரோட்டம்-திரோபவம்
5. தீர்த்தவாரி-அநுக்கிரகம்

1. கொடியேற்றம்:

ஆணவ இருளில் கிடந்த ஆன்மாக்களை அதனின்றும் மேலேற்றி உய்விக்கும் பொருட்டுச் செய்வதே சிருட்டி. விடை எழுதிய கொடியை மேலேற்றுதல் அதனை உணர்த்தும்.

2. நிவேதனம்:

மும்மல நீக்கத்தின் பொருட்டு ஆன்மகோடிகளுக்குஉடம்பு உலகம் நுகர்வுப்பொருள்கள் முதலியவற்றைத் தருவதே காத்தற்றொழிலாகும். இதனை பற்பல நிவேதனஞ் செய்வது உணர்த்தும்.

3. கிருட்டிணகந்தம்:

ஏழாந் திருநாளன்று நடராஜ மூர்த்திக்கு சாத்தப்படுகின்ற கருநிறமுள்ள மை.

ஆன்மகோடிகளைக் கட்டுப்படுத்தியபாசத்தை ஞான நோக்கினால் ஒடுக்குதலை இது உணர்த்துவதனால் சம்மாரம் எனப்படும்.

4. தேர் விழா

துன்பமயமான உலக வியாபாரங்களை யாவும் கீழ்ப்பட மேற்கொள்வது தேரேறுதல். இது மறைத்தலாகிய திரோபவம் ஆகும்.

5. தீர்த்தவாரி

இறைவனது கருணைமயமான தண்ணீரிலே ஆன்மாக்கள் முழுகி ஆச்சாரியனுடைய திருவருளால் மலநீக்கம் பெற்று சக்தி பதிந்து உய்வு பெறுதலாம். இது அநுக்கிரகமாகும்.

எனவே நித்திய நைமித்திய வழிபாடுகளும் திருவிழாக்களும் இறைவனுடைய ஐம்பெருந் தொழில்களை உணர்த்தும் பொருட்டு நடைபெறுகின்றன. ஆகவே இவற்றுள் மார்கழியில் நிகழும் விழா அநுக்கிரகமாகும் என்று கூறினோம். இது எல்லா விழாக்களிலும் மிகமிகச் சிறப்புடையதாகும்.

கிழமைகளில் சோமவாரம் சிவபெருமானுக்கு உரியது. நட்சத்திரங்களில் திருவாதிரை சிவபெருமானுக்கு உரியதாகும்.

திருவாதிரை நட்சத்திரத்தைத் தீர்த்தவாரியாகக் கொண்டு மார்கழியில் திருவிழா நிகழும்.

தோற்றத்தை உடுக்கையாலும், காத்தலை அபய திருக்கரத்தாலும், அழித்தலை கரத்தில் ஏந்திய அக்கினியாலும், மறைத்தலை ஊன்றிய திருவடியாலும், அருளலை தூக்கிய குஞ்சிதபாதத்தாலும் காட்டியருளும் நடராஜ மூர்த்தியின் விழா இத் திருவாதிரையிலே நிகழும். பூலோக கைலாயமாகிய சிதம்பரத்திலே கனக சபாபதிப் பெருமானுடைய இந் நல்விழா மிகவுயர்ந்த முறையில் நடைபெறும். ஆ! ஆ! அடியவர்களின் திருக்கூட்டம் அரஅர என்று முழக்கம்புரிந்து ஆனந்தமுறும்.

சேந்தனார் இறைவனுக்கு நிவேதித்த பரிகலசேடமே உண்ணும் நியதியுடையவர். ஒரு மார்கழி திருவாதிரை நாளிலே அவருக்குப் பிட்டுங் களியுமே கிடைக்கப்பெற்றன. மனவருத்தத்தோடு அவற்றை இறைவனுக்கு நிவேதித்தார். அவருடைய மெய்யன்பை விளக்கும்பொருட்டு, நடராஜமூர்த்தி, தமது சிற்சபையிலே பிட்டுங்களியும் உதிர்ந்து கிடைக்குமாறு செய்தருளினார். இதனைக்கண்ணுற்ற தில்லை மூவாயிரம் அந்தணர்களும் ஏனைய அடியார்களும் எல்லையில்லாத மகிழ்ச்சியுற்று இறைவனுடைய திருவருளின் எளிமையையும், சேந்தனாருடைய அன்பின் அருமையையும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். அன்றுதொட்டு இன்றுவரை மார்கழித் திருவாதிரை தோறும் பிட்டுங்களியும் எம்பெருமானுக்குச் சிறந்த நிவேதனங்களாக அமைந்து வருகின்றன.

மார்கழித் திருவாதிரைத் திருவிழா முழுவதும் அநுக்கிரக வடிவமாதலால், அநுக்கிரகத்தைக் குறிக்கும் தீர்த்தஸ்நானம் முக்கியமாதலால், அம் மார்கழி நித்திய பூஜாநுக்கிரகமாகிய விடியற் காலையில் தீர்த்தத்தில் முழுகி திருவடி தரிசனம் புரிவது ஆன்றோர் ஆசாரம்.

இதனால் திருவருணையில் எழுந்தருளியிருந்த நமது நான்காவது குருமூர்த்திகளாகிய மணிவாசக அடிகளார் மார்கழி விடியற்காலை தீர்த்தமாடப் போக வேண்டும் என்று ஒரு பெண் மற்றொரு பெண்ணை எழுப்புவதாகவும் சிவமயமாகிய நீரில் முழுகுவதாகவும், திருவடியைத் தரிசிப்பதாகவும் அமைந்திருக்கும் திருவெம்பாவையை அருளிச்செய்தனர்.

இத்திருவெம்பாவையை அன்பர்கள் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் முழுகி, திருநீறுபூசி, ஒருமைப்பாட்டை மனதுடன் ஓதி வழிபடுவராயின் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் பெற்று உய்வர்.

—————

## எத்தனை நாளோ?

துள்ளியான் திரிந்த சின்ன வயதிலும்
பள்ளியில் படித்த பத்து வயதிலும்
படிப்பினை முடித்த காளை வயதிலும்
உயிராய்ப் பழகிய நண்பர் பலரும்
அயலார் ஆயினர் அறியார் ஆயினர்.
இனியும் வருவது எத்தனை நட்போ?
இனிக்கப் போவதும் எத்தனை நாளோ?

பண்டிகைதோறும் பிறந்தநாள் தோறும்
மற்றும் மனையுளார் மணநாள் தோறும்
வாங்கிய பலப்பல புதுப்புது ஆடை
மங்கியே பழசாய் நைந்து போனது.
இனிவரும் நாளில் நனிமிக விரும்பி
எடுக்கப் போவதும் எத்தனை உடையோ?
உடுக்கப் போவதும் எத்தனை நாளோ?

பிறப்பினை எடுத்தது அன்னையின் ஊரில்
பிறந்தபின் வளர்ந்தது தந்தையின்ஊரில்
படிப்பினைத் தொடர்ந்தது பலப்பலஊரில்
பணியினைக் கொண்டது அயலோர் ஊரில்.
மணவினை முடித்தது மாமன் ஊரில்.
வாழப் போவதும் எத்தனை ஊரோ?
வாழும் ஊரும் எத்தனை நாளோ?

வீட்டுக் கெதிரில் வாழ்ந்தவள் ஒருத்தி,
வயலில் நெஞ்சம் கவர்ந்தவள் ஒருத்தி,
அழகால் மயக்கம் தந்தவள் ஒருத்தி,
ஆண்டவன் கொடுக்க வந்தெனை ஒருத்தி
ஆள்வதும் அல்லால் அலைதரு மனத்தில்
எண்ணப் படுவதும் எத்தனை பேரோ?
எண்ணப் போவதும் எத்தனை நாளோ?

சொறியும் சிரங்கும் வதைத்தெனை நீங்க,
இருமலும் காய்ச்சலும் வந்தெனைக் கூடிப்
பல்வலி தலைவலி பலபல வாகிப்
படுக்கையில் கிடத்திப் பலநாள் வாட்டிப்
பாதியாய் உடம்பை அரித்தன போக,
மீதமாய் வருவதும் எத்தனை நோயோ?
மாதமோ? இருப்பதும் எத்தனை நாளோ?

பாட்டியும் பாட்டனும் பட்டெனப் போக,
தந்தையும் தாயும் விட்டெனை நீங்கத்
தமயனும் தமக்கையும் தளர்நிலை எய்தி,
எமன்வரும் நாளை எதிர்பார்த் துள்ளனர்,
தனியெனை ஆக்கி விண்ணவர் ஏக
இனிஎதிர் இருப்பது எத்தனை ஆண்டோ?
இல்லை இருப்பது எத்தனை நாளோ?

வந்ததும் வாழ்வதும் துயில்தரும் கனவே,
சொந்தமும் பந்தமும் தொடர்பறும்உறவே
விழைவதும் மகிழ்வதும் அழிதருபொருளே
அழுவதும் சிரிப்பதும் பொருளறுஉணர்வே
மடிவதும் முடிவதும் வெல்லரும் விதியே,
என்சதை தின்றிட எத்தனை பேயோ?
என்கதை முடிந்திட எத்தனை நாளோ?

—டாக்டர் த. அமிர்தலிங்கம்

# எண் வகை யோகம்

டாக்டர் பொற்கோ
**தமிழ்ப் பேராசிரியர்,**
**சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600005.**

மூச்சுக்கும், மன நிலைக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. நீங்கள் கோபமாக இருக்கும் போது உங்கள் மூச்சைச் சற்றுக் கவனித்துப் பாருங்கள். கவலையாக இருக்கும் போது தானே பெருமூச்சு வருவதையும் எண்ணிப் பாருங்கள். அமைதியாக இருக்கும் போது நமது மூச்சின் ஓட்டம் எப்படி இருக்கிறது என்பதையும் கவனியுங் [illegible] உணர்ச்சி வசப்பட்டிருக்கும் போது [illegible] இல்லாமல் இயல் [illegible] கவனமாக கள். ந[illegible] நமது மூச்சு இசைவும [illegible] கிறது. அமைதியாக இருக்கும் போதும, [illegible] ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும் போதும் மூச்சு, இசைவாகவும், ஒழுங்காகவும், இயல்கிறது. மூச்சு ஒழுங்காகப் போய் வரும் போது நாம் செய்யும் எந்த வேலையும் நமக்குச் சுமையாகவோ, துன்பமாகவோ இருக்காது. இதிலிருந்தெல்லாம் நமக்கு விளங்குகிற செய்தி மூச்சை ஒழுங்கு படுத்திக் கொண்டால் வாழ்க்கையையே இனிமையாக்கிக் கொள்வது எளிது என்பது தான். உணவின் மூலமும் உறக்கத்தின் மூலமும் நமக்குக் கிடைக்காத ஒரு ஆற்றல் இயல்பான மூச்சின் மூலம் கிடைக்கிறது. அந்த ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளுகின்ற அருங் கலை தான் மூச்சுப் பயிற்சிக் கலை. யோக நூல்கள் பிராணாயாமத்தின் மூலம் இந்தக் கலையைத்தான் கற்பிக்கின்றன.

உடலினுக்குள் ஏராளமான காற்றை இழுத்துத் துருத்தியில் காற்றை அடைத்து வெளியே தள்ளுவது போல் மூச்சை விடுவதன் மூலம் இந்த ஆற்றலைப் பெறலாம் என்று நினைத்தால் அது பெருந் தவறு. இயல்பான இசைவான ஒழுங்கான மூச்சுப் பயிற்சிதான் மிகுதியான ஆற்றலை அளிக்கும். நல்ல உணவை அமைதியாகவும் முறையாகவும் அளவறிந்துண்பவன் அந்த உணவின் மிகுதியான பயனை அனுபவிக்கிறான். அளவுக்கு மீறி வெறி பிடித்தாற்போல உண்பவன் அந்த உணவின் பயனைச் சரியாக அனுபவிப்பதில்லை. மாறாக நோய்க்கும், துன்பத்திற்கும் ஆளாகின்றான். அதே போல முறையாக மூச்சு விடத் தெரிந்தவன் தான் காற்றின் மிகுதியான பயனை அனுபவிக்கிறான். முறையாக மூச்சு விடத் தெரிந்தவனுக்கு விழிப்பு நிலையும் பயன் அளிக்கும், உறக்க நிலையும் பயன் அளிக்கும், மூச்சை ஒழுங்கு படுத்தாதவன் விழிப்பு நிலையையும் முழுதாகப் பயன்படுத்த மாட்டான், உறக்க நிலையிலும் முழுதாக ஓய்வு கொள்ளமாட்டான்.

மூச்சின் நடப்புக்கும், மனநிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று முன்பே சொன்னோம். மூச்சை ஒழுங்கு படுத்தினால் மனநிலை ஒழுங்குபடும். மூச்சைப் பக்குவப்படுத்த உடல் உறுப்புகள் ஓரளவாவது கட்டுப்பட்டுப் பக்குவம் பெற்றிருக்க வேண்டும். அந்தப் பக்குவத்தைப் பெறத்தான் முன்னைய பகுதிகளில் ஆசனங்களின் தேவைகளைப் பற்றி விளக்கினோம். ஆசனங்களைப் பயின்று உடலுறுப்புகள் ஓரளவுப் பக்குவம் பெற்ற பிறகு எளிதாக மூச்சுப் பயிற்சியில் ஈடுபடலாம்.

[illegible]ருவகை மூச்சுப் பயிற்சிகளிலும் மூன்று [illegible]யாத நிலைகள் உண்டு. 1 மூச்சை இன்[illegible]றியமை[illegible] நிலை. 2. மூச்சை உள்ளே நிறுத் [illegible] 3. மூச்சை [illegible] வெளியே விடும் நிலை. உள்ளே இழுக்கு[illegible] [illegible] யோக நூலார் [illegible] நிறுத்துவதனைக் [illegible] ரேசகம் [illegible] உள்ளே இழுப்பத[illegible] மூச்சை [illegible] மூச்சை [illegible] பூரகம் என்றும, [illegible] கும்பகம் என்றும் வெளியே விடுவதனை என்றும் கூறுவர்.

மூச்சுப் பயிற்சியைப் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. இயல்பாக மூக்கின் இரு பகுதிகளிலும் மூச்சு போய் வருமாறு செய்யும் பயிற்சி. இதனை இயல்போட்ட பயிற்சி. என்று சொல்லலாம். 2. மூச்சை இடப்புறமும், வலப்புறமுமாக மாற்றி நடத்தும் பயிற்சி. இதனை இடவல மாற்றப் பயிற்சி என்று செல்லலாம்.

மூச்சுப் பயிற்சிகளைப் பதுமாசன நிலையில் இருந்து கொண்டு செய்யலாம். வேறு நிலையிலும் உடலை வசதியான நிலையில் அமர்த்திக் கொண்டு செய்யலாம். மூச்சுப் பயிற்சி செய்யும்போது பின் வரும் குறிப்புக்களை மனதில் கொள்ளவும்.

1. முதுகுத்தண்டு நேரான நிலையில் இருக்க வேண்டும்.

2. மூச்சை நிதானமாகவும், மெதுவாகவும் உள்ளே இழுக்கவேண்டும்.

3. உள்ளே இழுத்ததை விட நிதானமாகவும் மேலும் மெதுவாகவும் மூச்சை வெளியே விட வேண்டும்.

4. மூச்சை உள்ளே நிறுத்துவதில் கொஞ்சங் கூட முரட்டுத்தனம் கூடாது.

5. இப்போது மூச்சுப் பயிற்சி செய்கிறோம் என்ற தெளிவான உணர்வோடு பயிற்சி செய்ய வேண்டும்.

மூச்சுப் பயிற்சிகளில் நாம் மேலே குறிப்பிட்ட மூன்று நிலைகளையும் மீண்டும் நினைவில் கொள்ளுவோம். மூச்சை இழுப்பது பூரகநிலை; மூச்சை உள்ளே நிறுத்துவது கும்பகநிலை. மூச்சை வெளி

விடுவது ரேசக நிலை. இந்த மூன்றையும் நிலைகள் என்பதை விட நுண்மையான செயல்கள் என்பது பொருந்தும்.

தொடக்க நிலையில் இயல்போட்ட மூச்சையே பயிலலாம். பயிலும் போது தொடக்கத்தில் ஒரு நொடி நேரம் மூச்சை உள்ளே நிறுத்துவது ஒரு நொடி நேரம் மூச்சை வெளியே விடுவது என்று இப்படித் திட்டமிட்டுப் பழகவும். இதில் தேர்ச்சியும் தெளிவும் பெற்றபின் மூச்சை உள்ளே நிறுத்தும் நேரத்தையும், வெளியே விடும் நேரத்தையும் சற்று மிகுதிப்படுத்தலாம். அதாவது 1:1:1 என்ற விகிதத்திலும் பிறகு 1.2:3 என்ற விகிதத்திலும் பிறகு 1:3:2 என்ற விகிதத்திலும் அதன் பிறகு 1:4:2 என்ற விகிதத்திலும் இயல்போட்ட மூச்சுப் பயிற்சியைப் பயிலலாம். இவற்றைப் பற்றி எல்லாம் மீண்டும் தெளிவாகப் பார்ப்போம்.



தொடக்க நிலையில் மூச்சுப் பயிற்சியில் ஈடுபடும் ஒருவர் நேரக் கணக்கைக் கண்டு அஞ்சுவது இயல்புதான். நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டே மூச்சை இழுப்பது எப்படி? மூச்சை உள்ளே நிறுத்தும் போதும் வெளியே விடும் போதும் எல்லோராலும் நேரத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருக்க முடியுமா? இப்படி வினாக்கள் எழுவதும் இயல்புதான். இந்த நிலையில் நேரக்கணக்குத் தப்பினால் உயிருக்கே ஆபத்தாகிவிடும் என்று கூறிச் சிலர் அச்சுறுத்துவதைக் கேட்டுப் பலரும் யோக நெறிடைய விட்டு நெடுந்தூரம் ஓடி விடுகிறார்கள். அத்தகைய சூழலில் ஒரு எளிய இனிய வழியை நாம் பயிற்சியாளர்களுக்கு இங்கே உணர்த்தி வைப்பது மிக முக்கியமான கடமை.

நமது இலக்கணப் புலவர்கள் ஒரு எழுத்துக்கு இவ்வளவு மாத்திரை என்று கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைய அறிவியல் ஆராய்ச்சியின்படிப் பார்த்தாலும் அவர்கள் கூறிய மாத்திரைக் கணக்கு சரியாகவே இருக்கிறது. இரண்டு அல்லது மூன்று மாத்திரைகள் கொண்ட எளிய சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை மனத்துள் ஒலித்துக் கொண்டே மூச்சுப் பயிற்சியைச்செய்தால் நேரக் கணக்கு எளிதாகி விடும்.

நமது முன்னோர்கள் இப்படிப் பயன்படுத்திய சொற்கள்தான் பிற்காலத்தில் மந்திரங்கள் என்ற நிலையை அடைந்து விட்டனவோ என்று நினைக்க இடம் உள்ளது. அது எப்படி இருப்பினும் நேரக் கணக்குக்குச் சொற்கள் மிகச் சிறந்த கருவியாகப் பயன்படுகின்றன என்பது உறுதி.

நேரக் கணக்கிற்குச் சொற்களைத் தேர்ந்தெடுக்கும்போது எளிய ஒலிகளையுடைய பெயர்ச் சொல்லையோ வினைச் சொல்லையோ நம் விருப்பம் போல் தேர்ந்தெடுக்கலாம். எளிய ஒலிகளை சேர்த்துப் பொருளற்ற சொற்களைக்கூட உருவாக்கி கொள்ளலாம். இது பற்றி மீண்டும் விரிவாகவும் தெளிவாகவும் சிந்திப்போம்.

தொடக்கநிலையில் மூச்சுப் பயிற்சியைப் பயில விரும்புபவர்கள் இயல்போட்டப் பயிற்சியைக் கற்றுக் கொள்ளுவதுதான் நல் [illegible] பிட்ட உடனே மூச்சுப் [illegible] மற்ற [illegible] [illegible]து. சாப் [illegible] பயிற்சி செய்யக் கூடாது. [illegible] நேரங்களில் எப்போது வேண்டுமானாலும் இந்த இயல்போட்டப் பயிற்சியைச் செய்யலாம்.

முதுகெலும்பு நேராக இருக்கிற வகையில் நின்ற நிலையிலோ, அல்லது உட்கார்ந்த நிலையிலோ இந்தப் பயிற்சியைச் செய்யலாம்.

பயிற்சி :1 மூச்சை மெதுவாக உள்ளே இழுக்கவும். இரண்டு அல்லது மூன்று நொடி நேரம் மூச்சை உள்ளே இழுக்கலாம். அதே அளவு நேரம் மூச்சை உள்ளே நிறுத்தவும். அதே அளவு நேரம் மூச்சை வெளியே விடவும். இப்படியே ஐந்து அல்லது ஆறு நிலையில் அடுத்த பயிற்சியைப் மேற்கொள்ளவும். நேரக்கணக்கு 1:1:1

பயிற்சி:2. இரண்டு நொடி நேரம் மூச்சை உள்ளே இழுக்கவும். நான்கு நொடி நேரம் மூச்சை உள்ளே நிறுத்தவும். நான்கு நொடி நேரம் மூச்சை வெளியே விடவும். இப்படியே ஐந்து அல்லது ஆறு முறை செய்யலாம். இந்தப் பயிற்சியை இயல்பாக செய்யும் அளவுக்குப் பக்குவம் வந்தபின் அடுத்த பயிற்சிக்குச் செல்லலாம். நேரக் கணக்கு 1:2:2

பயிற்சி: 3. இரண்டு நொடி நேரம் மூச்சை உள்ளே இழுக்கவும். ஆறு நொடி நேரம் மூச்சை உள்ளே நிறுத்தவும், நான்கு நொடி நேரம் மூச்சை வெளியே விடவும். இப்படியே ஐந்து அல்லது ஆறு முறை செய்யலாம். சில நாட்கள் இந்தப் பயிற்சியை செய்தபின் அடுத்த பயிற்சிக்குச் செல்லலாம். நேரக் கணக்கு 1:3:2

பயிற்சி: 4. இரண்டு நொடி நேரம் மூச்சை உள்ளே இழுக்கவும். எட்டு நொடி நேரம் மூச்சை உள்ளே நிறுத்தவும். நான்கு நொடி நேரம் மூச்சை வெளியே விடவும். இப்படியே அமைதியாக ஐந்து அல்லது ஆறுமுறை செய்யவும். சில நாட்கள் இந்தப் பயிற்சியைப் செய்து அதில் கிடைக்கும் நன்மைகளை அனுபவித்துப் பழக வேண்டும். நேரக்கணக்கு 1:4:2

அமைதியாகவும், கவனமாகவும் கொஞ்சங் கூட முரட்டுத்தனம் இல்லாமல் யோக நெறியில் செல்பவர்களுக்கு மிக விரைவில் அவர்களுடைய உள்ளுணர்வு தெளிவாக வழிகாட்டத் தொடங்கி விடும்.

# திருமண வரம் அளிக்கும் திருமணஞ்சேரி

## தலச் சிறப்பு


வளம் கொழிக்கும், தமிழ் மணக்கும் தஞ்சைத் தரணியில் மாயவரத்தை அடுத்த குத்தாலம் நகரின் வடபால், சுமார் மூன்று கல் தொலைவில் அமையப்பெற்றது திருமணஞ்சேரி எனும் சிற்றூர்.

நற்றவப் பேறுபெற்ற நாயன்மார் பலரும் போற்றிப்பாடியுள்ள அருள்வள்ளநாதர் திருக்கோயில் கொண்டு மங்காப் புகழுடன் ஒளிவீசிக் காட்சிதரும் சைவப் பெருந்தலம், கல்யாணசுந்தர மூர்த்தி திருவுளம் கொண்டு கோகிலாம்பாள் அம்பிகை தன்னைக் கைப்பிடித்து இங்குத் திருமணம் செய்து கொண்ட காரணத்தால் அந்தப் பெயர் கொண்ட நற்றலம்.

எம்பெருமான் திருக்கல்யாண வைபவத்திற்காக சப்த சாகரங்களும் மாலையாக மாறிவந்ததாக ஐதீகம். சப்தசாகர தீர்த்தங்களும் திருக்கோயிலைச் சுற்றிலும் அகழியாகக் காட்சி தருகின்றன. தலப் பெருமைகள் பலவும் தன்னகத்தே கொண்டது இத்திருமணஞ்சேரி எனும் சிற்றூர். அப்பர் பெருமானாலும் திருஞானசம்பந்தராலும் போற்றிப் புகழ்ந்து பாடல் பெற்றது இப்புண்ணியத்தலம்.

அறியாமை மேலீட்டால் மன்மதன் சர்வேசுவரன் மீது தன் கணைகளைத் தொடுக்க, அதனால் அவரது நெற்றிக்கண் தீக்கு இலக்காயினன். தன் தவறு உணர்ந்த அக்காமவேள் மனம் நொந்து, திருந்தி ஈசனை துதிக்க எம்பெருமானும் மனமிரங்கி மன்மதன் பேறு பெற வரமருளியதும் இத் தலத்தில்தான்.

வணிகப் பெண்டிர் இருவர் தங்கள் சந்ததிகளுக்குள் கொண்டும் கொடுத்தும்சம்பந்தம் செய்து கொள்ள விரும்பி வாக்களித்துக் கொண்டனர். பின்னர் ஒருத்தி வயிற்றில் பிறந்தது ஆமையாக இருக்கக் கண்டு திகைத்தனர். இத்தலத்து ஆண்ட



அருள்மிகு கல்யாண சுந்தரர், கோகிலாம்பாளை மணம் புரியும் காட்சி

வனிடத்தில் தங்கள் குறைகளை இவர்கள் முறையிட்டுக் கொள்ளவே எம்பெருமானும் அருள்கூர்ந்து ஆமையுருவை மாற்றி, மனித உருக்கொள்ளச் செய்து திருமணம் நடந்தேறச் செய்ததாக வரலாறு கூறுகிறது.

திருமணம் கைகூடாது தடைபட்டு நிற்பவர்கள் இத்தல ஈசன் கல்யாணசுந்தரப்பெருமானுக்கு மாலை சாற்றி அர்ச்சனையும் செய்து வழிபட்டால் வெகுவிரைவிலேயே திருமணமாகப் பெறுவர் என்பது இத்தல ஈசன் மகிமைகளுள் மிகப் பிரச்சித்தமானது.


ராகு கிரகதோஷ நிவர்த்திக்கும் இந்தத் தலம் சாலச் சிறப்புடையது. ராகு தோஷத்தினால் பீடிக்கப்பட்டு, புத்திரபாக்கியம் கிட்டாத தம்பதியர் இங்குள்ள சப்தசாகர தீர்த்தத்தில் நீராடி இங்கு கோயில் கொண்டருளியுள்ள ராகு பகவானுக்குப் பால் அபிஷேகமும் பால் பொங்கல் நிவேதனமும் செய்து சாப்பிட்டால் தமது ராகுதோஷம் நீங்கப் பெற்று புத்திரப்பேறு பெறுவர் என்பது அனுபவ உண்மை.

முதலில் 1934ம் ஆண்டிலும், பின்னர் 1947ம் ஆண்டிலும் பின்னர் 1970ம் ஆண்டிலும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அண்மையில் 1986ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற்றது.

இவ்வாலயச் சிற்பங்கள் யாவும் மிகச் சிறப்புடையனவாகவும், இறைவழிபாட்டுச் சிறப்பை உணர்த்தும் வகையிலும் அரிய பொக்கிஷமாகக் காட்சி தருகின்றன.

வருடந்தோறும் சித்திரை மாதம் பூச நட்சத்திரத்தில் ஈசன் திருக்கல்யாண மகோற்சவம் மூன்று தினங்கள் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நாட்களில் ஊரே மணக்கோலத்துடன் காட்சி தருகின்றது.

தினசரி பூஜைகள் முறையாகவும், செம்மையாகவும் நடத்தப்பட்டு வருகின்றன. திருவனந்தல், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தஜாமம் ஆக ஐந்து காலப் பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றன.



கன்னிப்பெண்கள் கலயாண வரம் கேட்டுப் பிரார்த்தித்து மாலை அணிந்து கொள்ளுதல்

## ஸ்ரீ உத்வாகநாதர் ஆலயம்

காரண ஆகம முறைப்படி அமையப்பெற்றுள்ள இவ்வாலயத்தின் மூலவர் ஸ்ரீ உத்வாகநாதர் (அருள் வள்ளநாதர்). அம்பிகை கோகிலாம்பாள் (யாழினும் மென்மொழியாள்). திருமணவரம் அருளும் அனுக்கிரக மூர்த்தியான கல்யாணசுந்தரர் திருமணக் கோலத்துடன் காட்சி தருகிறார்.

செம்பியன் மாதேவியாரால் இந்த ஆலயம் திருப்பணி செய்யப்பட்டதாகக் கல்வெட்டுகளினின்றும் அறியக் கிடக்கிறது. ராஜ கோபுரம் மல்லப்ப நாயக்கரால் செய்விக்கப்பட்டது.

தற்போது ஆலய நிர்வாகம் சென்னை அறநிலைய ஆட்சித் துறையின் மயிலாடுதுறை துணை ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்ட நிர்வாக அதிகாரி-தக்கார் ஒருவரால் குறைவின்றிப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

## ஆலயச் சுற்றுக்கோயில்கள்

கீழ்த்திசை நோக்கியிருக்கும் ஆலயத்தினுள் நுழையும்போது ராஜகோபுரத்தைத் தாண்டியதும் கணபதி காட்சி தருகின்றார். அடுத்து முறையே துவஜஸ்தம்பம், பலிபீடம், மகாநந்தி மண்டபம் அமையப்பெற்றுள்ளன.

கட்ட கோபுரத்தைத் தாண்டியதும் விநாயகர் சோபன மண்டபத்தின் முன்புற வாசலில் வரசித்தி விநாயகராகக் கோயில் கொண்டுள்ளார்.

கோயிலின் உட்புறம் துவார மண்டபத்தில் துவாரபாலக நந்தியுடன் கர்ப்பக்கிரஹத்தில் ஸ்ரீஉத்வாகநாதர் (அருள்வள்ளநாதர்) அழகுறக் காட்சி தருகிறார். நிருத்தமண்டபத்தில் ஸ்ரீநடராஜர் நடனமாடிக் கொண்டே பக்தர்களுக்கருள் பாலிக்கிறார். அவருக்கு எதிர்ப்புறத்தில் கிழக்கு முகமாக கல்யாணசுந்தரர் கல்யாண கோலத்தில் காட்சியளிக்கிறார். இவர் இவ்வாலயத்தில் தனிப்பெரும் நாயகராவார்.

இவர்களின் அருளைப் பெற்றுக்கொண்டு வரும்போது ஸ்ரீகோகிலாம்பாள் அம்பிகை (யாழினும் மென்மொழியாள்) மணமேடையில் மணப்பெண் இருக்க வேண்டிய முறையில் சுகாசனத்தில் காட்சி தருவது கண்களுக்கும் கருத்துக்கும் தனிப் பெரும் விருந்தாகும். அம்மன் சந்நிதியின் மேற்புறம் சயன ஆலயம் அமைப்பெற்றுள்ளது.

நாயக்கர் ஆகியோர் சுவாமியின் கருவறையின் நான்கு புறங்களிலும் இருக்கின்றார்கள்.

பைரவர், சூரியன், சனீசுவரபகவான், பச்சையப்பநாதர் (ருத்ரவனேசுவரர்) பச்சையம்மை நாயகி(ருத்ரவனேசுவரி) இவர்கள் கீழ்த்திருமாலைப்பத்தியில் இருக்கின்றார்கள்.

பொதுவில் இவ்வாலயம் பற்பல அரிய திருவுருவங்களைத் தன்னகத்தே கொண்டு ஆலய வழிபாட்டுக்குச் சிறந்ததோர் இடமாக உளமும் மனமும் நிறைந்து வழிபட ஏற்றதாக அமைந்துள்ளது.

## புராண வரலாறு

உமா தேவியார் கயிலையில் ஒருநாள் ஈசனை வணங்கி, 'மற்றுமொருமுறை தங்களை மணந்து இன்புற வேண்டுமென' வரங்கேட்க, சிவபிரானும் கருணைகொண்டு 'வரும் பிர்மகற்பத்தில் நின்னை மணம் புரிந்தருள்வேன்' என்றார்.



**கல்யாண சுந்தரர் அருளால் திருமணம் நடக்கப்பெற்ற தம்பதிகள் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்தல்**

பிறகு உட்பிரகாரத்தில் வரும்போது, நடராஜர் சபையின் நேர்எதிர்ப்புறம், சமயம் பரப்பிய தனிப் பெரும் குரவர் நால்வர் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தேவகோஷ்டத்தில் தென்புறம் பிட்சாடனர், பால கணபதி, நடராசர், யோக வடிவில் தட்சிணாமூர்த்தி, மேற்புறம் லிங்கோத்பவர், வடபுறம் பிர்மா, ராகுபகவான், துர்க்கை பழையாந்தகர் இருக்கின்றார்கள். ஆலயத்தின் கன்னி மூலையில் அழகு விநாயகரின் சந்நிதியும், திருமாலைப் பத்தியில் சுப்பிரமணியர் சந்நிதி, சுவாமியின் கருவறையின் மேற்புறம் உபய நாச்சியாருடன் மகாவிஷ்ணு சந்நிதி, லட்சுமி சந்நிதி, பரத மகரிஷி, செம்பியன் மகாதேவி மல்லப்ப

தன் விருப்பம் ஈடேற வெகுகாலம் தள்ளி ஈசன் நாள் குறிப்பதைக்கேட்டு வருத்தமுற்ற உமையவளும் எம்பெருமானிடம் சற்று அலட்சியமாக நடக்க தலைப்பட்டார். இதனால் சிவபெருமான் சினங்கொண்டு உமாதேவியாரைப் பூவுலகில் பசுவாகி வாழப் பணித்தார்.

கோ உருக்கொண்ட உமையாள் தன் செயல் நினைந்து வருந்தி எம்பெருமானிடம் சாபவிமோசனம் கேட்டு மன்றாடவே எம்பெருமான் சினந்தணிந்துஅருளியவாறு திருமகள், கலைமகள், இந்திராணி ஆகிய அமர மாதர் பலரும் கோ உருக்கொண்டு, உமாதேவியாருடன் பூவுலகில் அசுக்காடு



**பழைய மாலையைத் திருமணத்திற்குப்பின் திருக்குளத்தில் செலுத்துதல**

அரசங்காடு ஆகிய இடங்களில் உலவி வந்தனர். திருமால் பசு மேய்ப்பவனாக உருவெடுத்து அப் பசுக்களைப் பராமரித்து வரலானார்.

அம்பிகை பொழிந்த பாலால் தன் திருமேனி குளிரப்பெற்றும், குளம்பின் ஸ்பரிசத் தழும்பும் பெற்று மகிழ்ந்த சிவபெருமான், உளம் கனிந்து அம்பிகை விரும்பியவாறு திருமணம் புரிந்து கொள்ளவும் திருவுளங்கொண்டு பரத மகரிஷி நடத்திய யாகவேள்விக் குண்டத்தில் தோன்றிய உமையாளை திருமணஞ்சேரியில் திருமணம் புரிந்து அருளினார் என்பது தலவரலாறு.

தேரழுந்தூரில் அம்பிகைக்கு பசு சாபம் கொடுக்கப்பட்டது. அசுக்காட்டில் அம்பிகை பசு உரு ஏற்றும், கோமலில் திருமால் பசு மேய்ப்போனாக உருவெடுத்து பசுக்களை பராமரித்து வந்ததாகவும், திருக்குளம்பத்தில் ஈசன் பசுவின் குளம்புத் தழும்பை ஏற்ற தாகவும், திருவாவடுதுறையில் பசுவுக்கு முக்தி கொடுக்கப்பட்டதாகவும், திருத்துருத்தி என்னும் குத்தாலத்தில் பரத மகரிஷி நடத்திய யாக வேள்வியில் உமை மங்கை தோன்றினார் எனவும் அறியக்கிடக்கின்றன.

திருவேள்விக்குடியில் திருமணத்திற்கான கங்கணதாரணமும் மங்கள ஸ்நானமும் செய்து, குறுமுலைப்பாளையில் பாலிகை ஸ்தாபனம் செய்தும், எதிர்கொள்பாடியில் இறைவனை எதிர் கொண்டழைத்தும், திருமணஞ்சேரியில் எம்பெருமான் உமைமங்கை தேவியாரைக் கரம்பற்றித் திருமணம் செய்து கொண்டார். இத்தல வரலாற்றுப் பெருமைக்கு ஈடும் இணையுமற்ற சிறப்பாக இது அமைந்துள்ளது.

---




## தீது புரியாத தெய்வம்

ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக் கிரங்கித்
தீது புரியாத தெய்வமே - நீதி

தழைக்கின்ற போரூர் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு


—தவத்திரு சிதம்பர சுவாமிகள்

# கல்பாக்கம் ஆலயத்தில் ஆடிக்கிருத்திகை விழா



அலைகடல் துதிபாடி ஆனந்தப் பண்எழுப்ப
அடியார்கள் மகிழ்ந்தாங்கே அன்புடன் ஒன்றுசேர
கருமுகிலும் களித்தாட கல்பாக்கம் அதிலமர்ந்த
கந்தனாம் அவன்கரத்து வேலை கண்டுதொழுவதே எமக்குவேலை


—அருள்முருக சௌந்தரராஜு



✻

கல்பாக்கம் அருள்மிகு காமாட்சியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற ஆடிக் கிருத்திகை விழாவில், குழந்தைகள் தெய்வ வடிவங்களைத் தாங்கிக் கலந்துக் கொண்ட மாறுவேடப் போட்டி நடைபெற்றது, இப்போட்டியில் பங்கு கொண்ட குழந்தைகள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

✻



# வைகுண்ட ஏகாதசியும், திருஅத்யயண உற்சவமும்

திருமலை நல்லான் இராமகிருஷ்ண ஐயங்கார்

திருமகள் கேள்வனே நாராயணன். அவனுக்கும் உயிரினங்களுக்கும் விடவரிய தொடர்பு உண்டு. ''நார'' ''அயந'' என்னும் இரு சொற்கள் கூடி ''நாராயண'' என்னும் ஒருசொல்லாயிற்று' இது ஆறாம் வேற்றுமைத் தொகை. நாரங்களின் இடமானவன் என்று விரிக்க. அயநம் -இடம். ''நாரம்'' என்பதற்கு உயிர்த்தொகுதி என்பது பொருள். உயிரினங்களுக்கு இடமானவன், நாராயணன் என்றாயிற்று. நாரம் இன்றேல் நாராயணன் இல்லை. அயநம் (ஆதாரம்) இன்றேல் நாரம் இருத்தல் இயலாது. இதனையே திருமழிசை பிரான்,

''நானுன்னை யன்றியிலேன் கண்டாய்நாரணனே
நீயென்னை யன்றி யிலை''

என்று நான்முகன் திருவந்தாதியிலருளிச் செய்கிறார். ஆக, நாரம் எனப்படும் உயிரினங்களுக்கும் அயநம் எனப்படும் திருமகள் கேள்வனுக்கும்உள்ள தொடர்பு, தொன்றுதொட்டு என்றுமுள்ளது என்றதாயிற்று.

பெற்றதாய் போன்றவன், நாராயணன். பெற்றெடுத்த சேய் போன்றவை உயிரினங்கள். சேயாம் உயிரினங்களை மாயை யெனும் பேய், தாயினிடமிருந்து பிரித்துவிட்டது. பிரிந்துவருந்தும் குழந்தைகளைத் தேடிக் கண்டெடுத்து அணைப்பதற்கு தாய்தான் முயல்கின்றாள். பிரிந்த குழந்தைகள் என்ன செய்யும்? கிடைக்கும் திண்பண்டங்களைத் தின்று நோய்வாய்ப்படுகின்றன. தாயிருப்பதே தெரியாதே! தாய்ப்பாலின் சுவையை அவை எங்ஙனம் காண இயலும்! இறைவன் இருப்பதையே உயிரினங்கள் அறிகிலவே. இறையருளின் சுவையை எங்ஙனம் காண்பது?

உயிர்க்கெல்லாம் தாயாய் அளிக்கின்றவன் தண்டாமரைக்கண்ணன். உயிரினங்களை கண்டு தனது அருள் நோக்காம் பால் ஊட்ட விழைகின்றான் கண்ணன். அழகிய சில தலங்களில் வந்து காத்துக்கிடக்கிறான். விளையாட்டுப் போக்கில் குழந்தைகள் இங்கு வரக்கூடும்; கண்டுபிடித்து விடலாமென்பது அவனது விருப்பம். அங்ஙனம் அவன் வந்து தங்கிய தலங்களையே ''திருப்பதிகள்'' அல்லது உகந்தருளின நிலங்களென்கிறோம். இத்தகைய தலங்களில் தலையானது திருவரங்கம். உயிரினங்கள் பல தன்பால் சிக்குதல் பற்றி எம்பெருமான் மிகவும் உவப்புடன் அத்திருப்பதியிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீரங்கம் என்னும் சொல்லுக்கே உவந்து எழுந்தருளியிருக்கும் இடம் என்பது பொருளாகும்.

உயிரினங்களைக் காப்பதற்கு இறைவன் சில தலங்களைத் தேர்ந்தெடுப்பது போலச் சில காலங்களையும் தேர்ந்தெடுத்திருக்கிறான். அவைகள் புண்ணிய காலங்கள் எனப்படுகின்றன. தலங்களில் திருவரங்கம் போலப் புண்ணியகாலங்களில் ஏகாதசி தலைசிறந்ததாகும். எம்பெருமான் உகந்த தலமாதல் பற்றிப் திருப்பதி திருவரங்கமென்று பேர் பெற்றிருப்பது போல அவனுக்குப் பிடித்த காலமாய் இருத்தல் பற்றி ஏகாதசி ''ஹரிதினம்'' (நாராயணனுடைய நாள்) எனப்பெயர் பெற்றுள்ளது. அறிவற்ற தேச காலங்களில் எம்பெருமான் விருப்பம் செலுத்துவது, அறிவுபடைத்த உயிரினங்களை ஆட்கொள்வதற்கே ஆகும்.

வைணவர்கள் திருவரங்கத்தில் இருப்பதையே தம்பேறாகக் கருதுகின்றனர். ''திருவரங்கம் திருப்பதியே இருப்பதாகப் பெற்றோம்'' என்கிறார் மணவாள மாமுனிகள். ''நல்லார்கள் வாழும் நளிரரங்கம் ''என்கிறாள் ஆண்டாள். அரங்கத்திலிருப்பதே வாழ்வு என்பது அதன் குறிப்பு. ஸம்ஸாரம் அடிக்கொத்துச் சரணாகதி பண்ணின எம்பெருமானாரை நோக்கி ''திவ்விய மந்திரத்தைப்பொருளுடன் நவின்றுகொண்டு இந்த ஸ்ரீரங்கத்திலேயே இனிது இருக்க'' என்று அருளிச்செய்தான் திருவரங்கன். வைணவனாய் அருள்பெற்று விளங்குவதற்குத் திருவரங்கத்திற்குக் குடியேறினால் போதும். ஸ்ரீரங்கமே கோயில். கோயில் வாஸமே வைணவம். ''கோயிலில் வாழும் வைணவன் என்னும் வன்மை'' என்றார் பெரியாழ்வார்.

இவ்விதமே ஏகாதசி நோன்பினைக் கைக்கொண்டு ஒழுகுவதே வைணவமாகும். ஹரிதினத்தைக் கொண்டாடாதவன் எப்படி ஹரியைச் சேர்ந்தவனாக, அதாவது வைணவனாக ஆக முடியும்? பேராபத்து நேர்ந்த போதும் களிப்பு மிகுந்தபோதும் எவன் ஏகாதசி நோன்பை விடுவதில்லையோ, அவன் வைணவத்தீட்சை கொண்டவனாவான் என்கிறது ஸ்காந்தம்.

''ப்ரமாபதமாந்நர் ஹர்ஷேவா ஸமுபஸ்த்திதே

நைகாதசீம் த்யஜேத்யஸ்து தஸ்ய தீட்சாது வைஷ்ணவி''

என்பது ஸ்காந்த சுலோகம். வைணவன் தான் ஏகாதசி விரதம் கைக்கொள்ள வேண்டும் என்ப தன்று அதன் கருத்து. எவனாயினும் ஏகாதசி விரதமிருப்பவன் வைணவனாவான என்பதே இதன் கருத்து.

மானிடன் எவனாயினும் திருவரங்கத்தில் இருப்பதையே பயனாகக்கருதி யங்கே குடியருப் பின் வைணவனாகிறான். அவவண்ணமே ஏகாதசி விரதம் ஏற்பவன் எவனாயினும் வைணவன் ஆகி றான். எட்டு வயதுக்கு மேறபட்டு எண்பது வய துக்கு உட்பட்ட மானிடர் யாவராயினும் இருபட் சங்களிலும் ஏகாதசியன்று உபவாஸம் இருக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. நர்ணய சிந்து என்னும் நூலில் வைணவர், அல்லாதவர் என்கிற பிாவின்றியாவரும் இந்த ஏகாதசி விர தத்தை அனுட்டிக்க வேண்டுமெனறு முடிவு கட்டப் பட்டுள்ளது. உலகிற்குத் தீமை புரியும் அசுர சக்தி அழிந்தொழிந்த நன்னாளே ஏகாதசி எனப்படு கிறது. ஆகையால் உலகத்தவர் அனைவரும் கொண் டாடவேண்டியது அவசியமே யன்றோ.?

முரன் என்று பேர்பெற்ற அசுரன் ஒருவன் இருந்தான். அவனால் துன்புறுத்தப்பட்ட இநதிரா துயர் பரமசிவனை யணுகி வழி கேட்டனர். நார ணனைச் சரணடையுமாறு வழிகாட்டினார் பரம சிவன். சரணடைந்த தேவர்களுக்காக முன்னினறு யுத்தம் புரிந்தான் நாரணன். அசுரர்கள அழிநத னர். முரன் கிளர்நதெழுந்தான். அமரர் சிதறி னர். இறைவனும் ஆறறலிற் குறைவுடையவன போற் பயந்தோடி வதரி மலையிலுள்ள 'சிம் ஹவதி' என்னும் குகையிற் போய்க களைப்புத் தீரக கண்ணுறங்கினான். முரன் பின்தொடர்ந்து வாள்கொணடு வதம் செய்யமுறபட்டான். அவ்வ மயம் இறைவன் திருமேனியனின்றும் கன்னி யொருததி வெளிப்பட்டுப் போரிட முரனுக்கு முன் னின்றாள். முரன் முடிந்தான். கன்னி வடிவத்தில் தன்னிடமிருந்து வெளிப்பட்ட சக்தி அவ் இறை வனுக்கே வியப்பளிக்கினறது. ''என் பகைவனை முடித்தது யார்?'' என்று பரமன் வினவினான். அககன்னி உலகை அச்சுறுத்தும் அசுரனைத்தானே கொன்றதாக நவின்றாள. பேருதவி புரிந்ததாக அக்கன்னியிடம் நன்றி கூறி வரம் வேண்டுமாறு தூண்டினான் மாயன். ஏகாதசியென்று பேர் இடப் பெற்ற அவ்வனிதை, ''நின் அன்புக்கு உரியாளாக நான் ஆகல்வேண்டும்; திதிகளுள் முக்கியமானவ ளாக நான் விளங்கவேண்டும். யான் பிறந்த இந் நாளில் உபவாஸம் இருப்போருக்கு சித்திகளனைத் தும் கைப்புகவேண்டும்'' என்னும் வரங்களை வேண்டிக்கொண்டாள். இவ்விஷயம் பிரம்மோத்தர காண்டத்திற் கண்டது. பிரும்ம புராணத்திலுள் ளது. தீயோனை முடித்து மாயோனை வசப்படுத் தும் இந்நன்னாளை மாந்தரனைவரும் கொண்டா டாடுவது தகுமன்றோ?

இங்ஙனம் ஏகாதசி தோன்றியது, மார்கழி மாதம் கிருட்ண பட்சத்தில் ஆகையால், மார்கழி மாதத்துக்கிருட்ண பட்ச ஏகாதசி ''உத்பத்தி ஏகாதசி'' என்று வழங்கப்படுகிறது.

மார்கழி மாதத்துச் சுக்ல பட்ச ஏகாதசி ''மோட்ச ஏகாதசி'' என்று வழங்கப்பெறும். இதுவே விமோசனம் தரவல்லது. இந்த ஏகாதசி விரதத்தைக் கைக்கொண்ட அளவிலேயே ஒருவன் வைணவனாகிவிடுகிறான். அதனால் அவன் இன் னல்களிலிருந்து விடுதலை பெறுதலோடமையாது தன் தொடர்புடையாரையும் இன்னல்களிலிருந்து விடுவிக்கும் ஆற்றல் பெறுகிறான். உண்மை வைணவன் ஒருவன் ஒரு குலத்திலே பிறந்தால் அவனுடைய பிதிருக்கள் கரையேறிவிடுவதாக சாஸ்திரம் கூறுகிறது. இங்கு,

''எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்''

என்னும்குறளும் அதன் உரையும் நினைக்கத்தக்கன.

''ஆஸ்ப்போடயந்தி பிதரம் ப்ரண்ருத்யந்தி பிதாமஹா;

வைஷ்ணவோ ந:குலேஜாத; ஸநஸந்தா ரயிஷ்யதி''

(நமது குடியில் வைணவன் பிறந்துவிட்டான்; அவன் நம்மைக்கரையேற்றுவான் என்று பிதிருக்கள் குதித் துக் கும்மாளம் போடுகிறார்கள்) என்ற சுலோகம் இங்குக் கருதத்தக்கது.

வைகாநஸன் என்னும் அரசனொருவன் இந்த மோட்ச ஏகாதசி விரதத்தின் மகிமையினால் நர கத்திலழுந்தும் தன் பிதிருக்களைக்கரையேற்றின தாக புராணம் கூறுகிறது.

திவ்வியப்பிரபந்தங்கள் செந்தமிழ் மறையெனப் போற்றப்படுகின்றன. அவற்றுள் திருவாய்மொழி ஸாமவேதமாகக் கருதப்படுகின்றது. அதனை யறி யக்கற்று வல்லவர்கள் வைணவர்களாகிறார்கள்.

---

## பாவை நோன்பிருத்தலின் பலன்

ஓங்கி உலகளந்த
உத்தமன் பேர்பாடி

நாங்கள் நம்பாவைக்குச்
சாற்றி நீராடினால்

தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள்மும்மாரி பெய்து

பூங்குவளைப் போதில்
பொறிவண்டு கண்கடுப்பத்

தேங்காதே புக்கிருந்து
சீர்த்த முலைப்பற்றி

வாங்கக் குடம்நிறைக்கும்
வள்ளற் பெரும் பசுக்கள்

நீங்காத செல்வம்
நிறைந்தேலோர் எம்பாவாய்

—திருப்பாவை 4

அதனைக் கோயிலில் இந்த மோட்ச ஏகாதசி யன்றே தொடங்குகிறார்கள். அன்றிலிருந்து திருவாய் மொழித் திருநாள் பத்து நாட்கள் நடைபெறுகின்றது, ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பத்தாக அநுஸந்திக்கப்படுகிறது. முடிவில் ''அவாவற்றுவீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்'' என்றபடி ஆழ்வார் மோட்சமடைகிறார். ஏகாதசியன்று மோட்ச வாயில் திறக்கப்பட்டு விடுகிறது. பிறகு எல்லோருக்கும் அதிற்புகுவது எளிதாகிவிடுகிறது. மோட்ச ஏகாதசியை நாம் முறைப்படி கைக்கொண்டால் நமக்கு மோட்ச வாயில் திறந்தேயிருக்கிறதென்பதைக் கோயிலில் பிரத்தியட்ச மாகப் பார்க்கிறோம். மோட்ச ஏகாதசியே, வைகுண்ட ஏகாதசி என்றும் வழங்கப்படுகின்றது.

மோட்ச ஏகாதசிக்கு முன்னும் பின்னுமாகக் கோயிலில் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்கள் அனைத்தும் அத்யயனம் செய்யப்படுகின்றன. இது பெரிய உற்சவமாகக் கொண்டாடப்படுகிறது. திரு அத்யயன உற்சவமென்றே இதற்குப்பெயர். மோட்ச ஏகாதசிக்கு முந்திய பத்து நாட்களும் பிந்திய பத்து நாட்களுமாக இருபது நாட்கள் இவ் இவ்வத்யயன உற்சவம் கொண்டாடப்படுகிறது. முந்தியது பகற்பத்து என்றும், பிந்தியது இராப் பத்து என்றும் சொல்லப்படும். அந்தந்த வேளைகளில் அத்யயனம் செய்வதற்கேற்ப அவ்வாறு பெயர் வழங்கப்படுகிறது.

சாஸ்திரங்களில் திவ்வியப்பிரபந்தம் வேத மென்றும், வேதத்திற்குப்போல அதற்கும் நியமங்கள் உண்டென்றும் சொல்லப்படுகிறது. வடமொழி மறை, தைப் பௌர்ணமி முதல் ஓதாது நிறுத்தப்பட வேண்டும் என்றும், ஆவணிப்பௌர்ணமியிலிருந்து மீண்டும் தொடங்கப்படவேண்டு மென்றும் நியமமுள்ளது. அவ்வாறே தென்மொழி மறையாகிய திவ்வியப்பிரபந்தமும், கார்த்திகை மாதத்தில் பௌர்ணமியன்று முதல் ஓதாது நிறுத்தப்படவேண்டுமென்றும், மார்கழியில் அமாவாஸை கழிந்து மீண்டும் தொடங்குவதென்றும் நியமம் கையாளப்பட்டு, இவ்வுற்சவம் கொண்டாடப்பட்டு வருகிறது. வடமொழி மறையை ஓதாது மீண்டும் தொடங்கும் நியமம் தற்காலம் கைவிடப்பட்டுள்ளது. அதற்காக ப்ராயச்சித்தம் அநுட்டிக்கப்படுகிறது.

இவ்வுற்சவம் திருவரங்கம் பெரிய கோயிலில் தொன்று தொட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திருமங்கை மன்னன் ஆழ்வார் திருநகரியிருந்து ஸ்வாமி நம்மாழ்வாரை ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளப்பண்ணி மார்கழி மாதத்தில் இந்தத் திருவாய்மொழித்திருநாளை நடத்தி வந்ததாகத் தெரிகிறது. மாசி மாதந்தான் ஆழ்வார் திருநகரிக்கு மீண்டு எழுந்தருள முடிந்திருக்கிறது. ''திருத் தொலைவில்லி மங்கலம்'' வழியாகத் திரும்ப எழுந்தருளுவது வழக்கம். அது மாசி மாதத்தில் நம்மாழ்வார் தொலைவில்லி மங்கலம் எழுந்தருளி மீண்டும் திருநகரிக்கு எழுந்தருளும் உத்சவமாக இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருக்கார்த்திகை முதல் திவ்வியப்பிரபந்தம் ஓதாது, கோயிலில் அத்யயந உத்வசம் ஆன பிறகு தான் திவ்வியப் பிரபந்தத்தை யாங்காங்கே அநுஸந்திப்பது ஸ்ரீவைணவ ஸம்பிரதாயம்.

மார்கழி மாதம் பிறந்ததிலிருந்து தொண்டரடிப்பொடி யாழ்வார் அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சியும், ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையும் விடிவோரையில் விண்ணப்பம் செய்து திருவாராதனம் நடைபெறுகிறது.

## மார்கழி நீராடினால் மழை பொழியும்

ஆழிமழைக் கண்ணா
ஒன்றும் நீ கைகரவேல்

ஆழியுள் புக்கு
முகந்துகொடு ஆர்த்தேறி

ஊழிமுதல்வன் உருவம்
போல் மெய் கறுத்துப்

பாழியந் தோளுடைப்
பத்மநாபன் கையில்

ஆழிபோல் மின்னி
வலம்புரிபோல் நின்றதிர்ந்து

தாழாதே சார்ங்கம்
உதைத்த சரமழைபோல்

வாழ உலகினில்
பெய்திடாய் நாங்களும்

மார்கழி நீராட
மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

—திருப்பாவை 22

திரு அத்யயந உற்சவத் தொடக்கத்தின் முதல் நாள் இரவு அரையர் எனப்படும் விண்ணப்பம் செய்வார் திருநெடுந்தாண்டக மென்னும் திவ்வியப் பிரபந்தத்தை அபிநயத்துடன் வியாக்கியானத்துடனும் விண்ணப்பம் செய்வதைப் பெருமாள் திருச்செவி சாத்தியருளுவார். மறுநாள் முதல் பகற்பத்து உற்சவம்நடைபெறுகிறது. ''திருப்பல்லாண்டு'' தொடங்கி முதலாயிரம், பெரிய திருமொழி இவற்றை அரையர் அபிநயத்துடனும் வியாக்கியானத்துடனும் விண்ணப்பிப்பதைப் பெருமாள் அர்ச்சனை மண்டபத்தில் எழுந்தருளியிருந்து கேட்டருளுகிறார். ஏகாதசி முதல் நாள் மோகினித் திருக்கோலத்தில் நம்பெருமான் சேவை தருகிறார். புருசோத்தமன் பெண்ணுருவாகிக் காட்சியளிக்கிறார். புருசோத்தமனது பெண் உருவைக் கண்டு கண்ணுதலான் காமபரவசனாகிப் பின் தொடர்ந்ததாகப் பாகவதம் கூறுகிறது. நம் பெருமாளது நாச்சியார் திருக்கோலத்தைக் கண்டு ஸ்ரீபட்டர், பெண்கோலம் அழகாகப் பூண்டாலும் நாச்சியார் விழிவிழிக்கப்போகாது என்று அருளிச் செய்தாராம். ஸ்ரீவைகுண்ட ஏகாதசி யன்று ரத்தின அங்கி, ரத்தின கிரீடம் தரித்து பரமபதவாசல் வழியாக ஆயிரக்கால் மண்டபத்திற்குப் பெருமாள் எழுந்தருளுகிறார். பரமபதவாசல் பக்கத்திலொரு கிணறு உள்ளது. அதனை ''விரஜாநதி'' என்று வழங்குகிறார்கள். பரமபதம் போவார்கள் விரஜை

யாற்றில் மூழ்கித்தானே போகவேண்டும். அந்த முறையில் இங்கும் ''விரஜாநதி'' இருப்பது பொருத்தம் தானே.

இராப்பத்து நடைபெறும் ஆயிரக்கால் மண்டபம் திருமாமணி மண்டபம் என்று வழங்கப்படுகிறது. பரமபதமாம் வைகுண்டத்திலுள்ள மண்டபத்தின் திருப்பெயரே அது. ''ஸஹஸ்ர ஸ்தூணே'' என்று வேதத்திலும் பரமபதத்தில் ஆயிரக்கால் மண்டபம் இருப்பதாகக் கூறப்படுகிறது. இராப்பத்து உற்சவத்தில் நம்பெருமான், பந்தலில் பத்தி உலாவும் பத்து நாட்களும், நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய் மொழியை நம் பெருமாள் கேட்டருளுகிறார். இராப்பத்து உற்சவத்தில் நம்பெருமாள், ஏகாந்தமாக வீணை கேட்டுக்கொண்டு உள்ளே எழுந்தருளுவதை நினைந்து நினைந்து மனசாந்தி பெறலாம். நம் பெருமாள் தாளிணைக் கீழ் வாழ்ச்சி பெறுதலாகிய ''ஆழ்வார் மோட்சம்'' சேவிப்பது நம் நெஞ்சில் மேவிப்பதிவதொரு பேரின்பக்காட்சி யாகும். இயற்பா [illegible] பத்துக்கு [illegible]

[illegible] ஆயிரமும் இராப் [illegible] மறுநாள் நம்பெருமாளால் திருச்செவி சாத்தப்படுகின்றன. தென்மொழிமறையினைப் பெருமாள் ஆழ்வார் ஆசாரியர்களுடன் பேரோலக்கமாயிருந்து கேட்டருளி அதன் பெருமையினை நாடறியச் செய்கிறார்.

மார்கழி மாதம் வைணவமானது. ''மாதங்களில் நான் மார்கழி மாதமாகின்றேன்'' என்றான் கண்ணன் கீதையில். மார்கழி மாதம் சத்துவகுணம் தலைதூக்கும் காலம். இறைவழிபாட்டிற்குரியது அம்மாதமே. 'உலகியலில் ஈடுபட்டு முயல்வது ரஜோகுணத்தின் செயலாகும். சத்துவ மாதத்தில் உலகியலில் ஈடுபடலாகாது. இது கருதியே அதனைச் சூனியமாதம் என்றனர். ஒரு நாளில் விடிவோரை சத்துவ வேளை எனப்படுகிறது. அதனைப் பிராம்ம முகூர்த்த மென்பர். அந்த வேளையில் ஆன்மாவிற்கு இதமான விஷயத்தைப் பற்றிச் சிந்தனை செலுத்த வேண்டுமென்கிறது சாஸ்திரம். நாளுக்கு விடிவோரை போன்றது வருஷத்துக்கு மார்கழி மாதம். நமது ஓராண்டு காலம் தேவர்களுக்கு ஒரு நாளாகக் கருதப்படுகிறது. ஆடி முதல் மார்கழி முடிய இரவு. தை முதல் ஆனி முடியப் பகல். தை மாதம் தேவர்களுக்கு விடிகின்றது. விடிவுக்கு முந்திய மார்கழி மாதம் ப்ராம்ம முகூர்த்தமாகிறது. அந்த வேளையில் ஆன்மாவுக்கு இதத்தை நாம் நாடவேண்டும்.

வைணவ [illegible]

[illegible] வாய, சத்துவ குணம் வாய்ந்ததாய், பிராம்ம முகூர்த்தமாய் அமைந்த மார்கழியில் வரும் ஏகாதசி, மிகவும் சிறப்புடைய நாளாகும். அதிலும் வளர்பிறையில் வரும் ஏகாதசி மிகவும் சிறப்புடைய நாளாகும். அதிலும் வளர்பிறையில் வரும் மோட்ச ஏகாதசியோ மிகமிகச் சிறப்பமைந்த நாளாகும். அந்நன்னாளில் புக்கவருக்கு வைணவத்தை வழங்கும் திருவரங்கத்திற்கு போய் இறைவழிபாட்டில் ஈடுபட்டால் அதிலும் அறியக் கற்று வல்லாரை வைணவர் ஆக்கும் திருவாய் மொழியாம் திவ்விய அமிருதத்தை மாந்தினால் அதனினும் யாம் பெறும்பேறு பிறிதொன்று இருக்க முடியாதன்றோ?

—o—



## யசோதை பெற்ற பாக்கியம் யான் பெற்றிலனே !

மருவு நின்திரு நெற்றியில் சுட்டி
அசைதர மணி வாயிடை முத்தம்

தருதலும் உன்றன் தாதையைப் போலும்
வடிவு கண்டுகொண் டுள்ளமுள் குளிர

விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து
வெகுளியாய் நின்றுரைக்குமவ் வுரையும்

திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம்
தெய்வ நங்கை யசோதை பெற்றாளே

—குலசேகரர்

[நெற்றிச் சுட்டி அசைய கண்ணன் முத்தம் கொடுக்கப் பாக்கியம் செய்தவள் யசோதையே. கண்ணனின் அழகுத் திருமேனியைக் கண்டுஉள்ளம் குளிர, பாக்கியம் செய்தவளும் யசோதையே! கண்ணன் தன் சிவந்த சிறிய வாயில் விரல்களைச் சேர்த்துக் கொண்டு, சினத்துடன் மழலைமொழிய கேட்கப் பாக்கியம் செய்தவளும் யசோதையே! தெய்வ யசோதை செய்த பாக்கியம் யான் செய்திலனே!).

# தாமரைத் திருவடிக் கீழ்....

டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி

... நாயன்

தமிழகத்தில் தோன்றிய ... மார்களுள் காரைக்கால் அம்மையார் குறிப்பிடத் தக்கவர். சேக்கிழாரின் பெரியபுராணம் இவ் வம்மையின் வாழ்வியலை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.


காரைக்காலில் பெரும் வணிகரான தனதத்த ரின் செல்வமகளாய்ப் பிறந்தவர் புனிதவதி. வளரும்போதே இறையன்பும், கருணைப் பொலிவும் சிவனடியாரிடம் தளராப் பேரன்பும் கொண்டவராய், அருட்செல்வியாய் வளர்ந்தார். பருவம் செழித்த காலத்தே நாகை வணிகர் பெருமகன் பரமதத்தனுக்குப் புனிதவதியை மணம் முடித்தனர். ஓரே பெண்ணாதலால் தன்னுடனேயே தன் திருமகள் இருக்க வேண்டுமென்ற ஆசை மிகுதியில், தன் மகனுக்கும் மாப்பிள்ளைக்குமாய்த் தனி மணிமாடம் கட்டிக் கொடுத்து, அவர்களை அதில் குடியேற்றிப் போற்றி வந்தார் தன தத்தர். பரமதத்தனும் வணிகத்தில் ஈடுபட்டு செல்வம் பெருக்கி வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் பரமதத்தனுக்கு வேண்டியவர் ஒருவர் இரண்டு மாங்கனிகளைத் தந்தார். அவன் அவற்றை வீட்டுக்குத் தந்தனுப்பினான். புனிதவதி கணவன் தந்தனுப்பிய மாங்கனிகளைப் பெற்று உள்ளே எடுத்துவைத்தார், அதுபோது சிவனடியார் ஒருவர் பசியுடன் தேடி வந்தார். அவருக்கு புனிதவதியார் கால், கை கழுவ நீரளித்துப் பீடத் திலமர்த்தி உணவுபடைத்தார். கறியமுது சமைக் காதிருந்தமையால் தன் கணவன் தந்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை அரிந்து படைத்தார். வந்த திருத்தொண்டர் அவ்வினிய உணவை அருந்தி மகிழ்ந்து புனிதவதியை வாழ்த்திச் சென்றார்.

பரமதத்தன் பகலுணவுக்கு வந்தான். உண வருந்த அமர்ந்ததும், அவன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளில் சிவனடியார் உண்டது போக எஞ்சி யிருந்த ஒன்றைப் புனிதவதியார் அவனுக்குஅரிந்து வைத்தார். அதைச் சுவைத்து உண்ட பரமதத்தன் இன்னொரு கனியையும் கேட்டான். புனிதவதி திடுக்கிட்டார்; செய்வதறியாது திகைத்தார். கணவனைக் கேட்காமல் சிவனடியார்க்குத் தந்தது தவறோ என்றுகலங்கினார். இறைவனை நினைத்து வணங்கினார். உடன் இறையருளால் மாங்கனி யொன்று புனிதவதி கையில் தோன்றியது. அதை எடுத்துச் சென்று கணவனுக்குப் படைத்தார். முன் வைத்த கனியை விட இது சுவை மிகுதியாக இருந்ததை உணர்ந்த பரமதத்தன், 'இது ஏது?' என்றான். என்ன சொல்வதென்று தெரியாது குழம்பிய புனிதவதியார் இறுதியில் நடந்த உண்மைகளை உரைத்தார்.

'நீ சொல்வதெல்லாம் உண்மையானால் எனக்கு இறையருளால் இன்னொரு கனி பெற்றுக் ... பரமதத்தன் கேட்க, புனிதவதி ... கனியொன்று கொடு' என்று ... இறைவனை நினைத்து வேண்ட, மா... புதிதாய்த் தோன்ற, அதை மணவாளன் கையில் வைத்தார். பரமதத்தன் அதிசயித்துப் போய் நிற்க, கனியும் கையிலிருந்து மறைந்தது. பரம தத்தன் அஞ்சி நடுங்கினான். இறையருள் பெற்ற இப்பெண்ணுடன் இல்லறம் நடத்துவது எப்படி என்று குழம்பினான். சிலநாள் அவரிடமிருந்து விலகி வாழ்ந்தான். பிறகு வெளிநாடு சென்று பணம் திரட்டி வருவதாகக் கூறிக் கப்பலேறிப் புறப்பட்டான். பலநாடு சென்று வாணிகம் செய்து செல்வம் வளர்த்து அங்கேயே பெண்ணொ ருத்தியை மணந்து, மகளொன்று பெற்று அப் பெண்ணுக்குப் புனிதவதியென்று பெயர் சூட்டி வாழ்ந்து வந்தான்.

காரைக்காலில் கணவன் வருவான் வருவான் என்று காத்திருந்த புனிதவதி, கடல் கடந்துசென்று வந்த உறவினர் வழி பரமதத்தன் வேறொரு ஊரில்



காரைக்காலில் உள்ள காரைக்கால் அம்மையார் ஆலயம்

குடும்பம் அமைத்து வாழ்வது கேள்விப்பட்டதும் அங்குச் சென்றார். பரமதத்தன் தன் குடும்பத்துடன் புனிதவதி இருக்குமிடம் வந்து, அவரது காலடியில் வீழ்ந்து வணங்கித் தொழுதான். கண்டவர் திடுக்கிட்டனர். பின் பரமதத்தன் காரைக்காலில் நடந்தது கூறி, 'இவர் மனிதப் பிறவியல்ல, தெய்வம், அதனால்தான் இவரைத் துறந்து வேறோரு பெண்ணை மணந்தேன்' என்றுவணங்கி நின்றான். புனிதவதியார் செய்வதறியாதுஇறைவனை நினைத்தார். 'என் கணவனுக்காகவே இத்தனை நாள் இந்த வனப்பான உடலைச் சுமந்து நின்றேன். இனி இது எதற்கு? என் சதையுடம்பை அழித்துப் பேயுரு தருக' என வேண்டினார். இறைவனும் அவ்வாறே அருளினார். பேய் வடிவு பெற்ற பெருமாட்டியார் அற்புதத்திரு அந்தாதி, திரு இரட்டை மணிமாலை பாடியருளினார். இறைவனைக் காண விரும்பிக் கயிலை



காரைக்கால் அம்மையார்


சென்றார். கயிலையை அடைந்ததும், அங்குக் காலால் நடத்தல் தவறென்று தலையால் நடந்து சென்றார். அவர் தலையால் நடந்து வருவதைக் கண்டு வியந்த பார்வதிதேவி இறைவனை உசாவ, இறைவரும் 'இவள் நம்மை வழிபடும் அம்மை. இப்பெருமைமிக்க வடிவம் நம்மை வேண்டிப் பெற்றாள்' என்றருளினார். புனிதவதியார் அருகில் வந்ததும் இறைவன் 'அம்மையே' என்றழைத்தார். புனிதவதியாரும் 'அப்பனே' என்றழைத்து அவர் திருவடிகளை வணங்கினார். இறைவன் யாது வேண்டுமென்று கேட்க, 'தங்களிடம் நீங்காத அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும். பிறப்புண்டானால் இறவாமை வேண்டும். தாங்கள் ஆடும்போது தங்கள் திருவடியின் கீழிருந்துகண்டு மகிழ்ந்து பாடியிருத்தல் வேண்டும்' என்றார். இறைவன் அவ்வாறே அருள் புரிந்து, 'தென் திசையில் திருவாலங்காட்டில் நாம் ஆடும்போது நீ கண்டு மகிழ்ந்து பாடுக' எனப் பணித்தார். அம்மை திருவாலங்காடு அடைந்தார். ஊரை நெருங்கியதும் மீண்டும் தலையாலே நடந்து சென்றார். திருவாலங்காட்டில் ஆடல் அரசனின் திருக்கூத்து கண்டு மகிழ்ந்து இறைவன் சேவடிக் கீழ் தங்கிப் பாடிப் பரவியிருந்தார்.

ஆடவல்லானின் தாமரைத் திருவடிகளின் கீழமர்ந்து அப்பெருமானின் அதியற்புத திருக்கூத்தைக் கண்டு மகிழ்வதையே வாழ்க்கை லட்சியமாய்க் கொண்டு காவியப் புகழ்பெற்ற காரைக்காலம்மையைச் சிற்ப வடிவில் பல கோயில்களில் கண்டு மகிழலாம். கோனேரிராசபுரத்து உமா மகேசுவரர் கோயிலில் ஆடவல்லானுக்குப் பக்கத்தில் காரைக்காலம்மையைச் சிற்ப வடிவில் செம்பியன் மாதேவி வடித்துக் களித்திருக்கிறார். இராசேந்திரசோழனின் கங்கை கொண்ட சோழீச்சரத்திலும் நடராசரின் சிற்பத் தோற்றத்தின் கீழ் ஆடல் கண்டு மகிழும் நிலையில் அம்மையைக் காணலாம். கல்லில் வடித்த கவிதைகளாய்த்தான் காரைக்காலம்மையை, ஆடவல்லானின் திருவடிக் கீழும், ஆடல் கண்டு அநுபவிப்பவராய், இறைவனின் பக்கத்திலும் கண்டு மகிழ முடிகிறதே தவிர, செப்புத் திருமேனியாய் ஆடவல்லானுடன் காண்பது அரிதாகவே உள்ளது.

இந்நிலையில் திருச்சியில், அமைந்துள்ள அருள்மிகு பூலோகநாதசாமி திருக்கோயில், ஒரு அபூர்வமான செப்புத் திருமேனியைக் கொண்டுள்ளது. ஆடவல்லானாய் இறைவனும், அவரது அடிக்கீழ் அம்மையுமாய் அழகுக கோலமாய் அமைந்த செப்புத் திருமேனி இது. முப்பது தீச்சுடர்களுடன் அமைந்த திருவாசியின் மேற்புறத்தில் பூவேலைப்பாடுகள் அழகுற அமைந்துள்ளன. தாமரைத் தளத்தில் இரு கைகளிலும் பாம்பொன்றைப் பிடித்தவாறு குப்புறப்படுத்திருக்கும் முயலகனின் முதுகின் மீது வலது திருவடியை ஊன்றியபடி ஆடவல்லான் அழகரசராய்க் காட்சியளிக்கிறார். இடது திருவடி தூக்கிய திருவடியாய் வலப்புறம் வீசப்பட்டுள்ளது. விரிந்த சடையில் வலப்புறம் கங்காதேவியும், இடப்புறம் பிறைநிலவும் காணப்படுகின்றன. சடாமகுடத்தில் தலையோடும், ஊமத்தம்பூவும், கொக்கிறகும் வடிக்கப்பட்டுள்ளன. வலக்காது நீள்செவியாகவும், இடக்காதில் பனையோலைக் குண்டலமும் காணப்படுகின்றன.

இறைவனின் வலக்கைகளில் பின்கை உடுக்கை ஏந்தியுள்ளது. முன் கை காக்கும் கரமாய் அமைந்துள்ளது. இடப்புறக்கைகளில் முன்கை வேழமுத்திரையில் வலப்புறம் நீட்டப்பட்டுள்ளது. பின்கை தீச்சுடரை உள்ளங்கையில் ஏந்தியுள்ளது. பாம்புக் கங்கணம், கைவளைகள், கழுத்தணிகள், இடுப்பணிகள் முதலியன இறைவன் திருமேனியை அழகு செய்கின்றன. இடையில் மடித்து கட்டிய அரையாடை, இலேசாய்ச் சிரித்த இள நகையரும்பும் அழகு முகத்தில் கருணையும் அருளும் பொலிந்தவாறுள்ளன.

முயலகன் படுத்துள்ள தாமரைத் தளத்தின் கீழ்த்தளத்தின் முன்புறத்தில்தான் வலப்புற மூலையில் காரைக்கால் அம்மையும், இடப்புற மூலையில், நந்திகேசுவரரும் காட்டப்பட்டுள்ளனர். நந்திகேசுவரரின் பின்னிரு கைகள் மேல் தூக்கிக் கூப்பி வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளன. முன்னிரு கைகள் குடமுழா என்னும் ஐந்து முக இசைக்கருவியை இறைவனின் ஆடல் அசைவுகளுக்கேற்ப தாள லயத்துடன் தட்டிக் கொண்டிருக்கின்றன. இந்தக் குடமுழாவைத் தன் இரு கால்களுக்கிடையில் பக்குவமாய்ப் பிடித்தபடி இறைவனின் ஆனந்தத் தாண்டவத்தில் தன்னை மறந்த நிலையில் மெய் சிலிர்த்து நிற்கும் நந்திகேசுவரரை பார்க்கப் பலநூறு கண்கள் வேண்டும்.



**ஆடவல்லான் அடிக்கீழ் காரைக்கால் அம்மையார்**

வலப்புற மூலையில் காரைக்கால் அம்மையார் பாடும் மெய்ப்பாட்டில் கையிரண்டிலும் தாளங் களைக் கொண்டு அமர்ந்த நிலையில் காட்சி தரு கிறார். மார்பிலும், கைகளிலும், கழுத்திலும், நெற்றியிலும் திருநீற்றுக் கோடுகள், இடைக்குக் கீழ் ஆடை; தொங்கும் செவிகள், எளிமையான கோலத்தில் தெய்வத் திருமுன்னில் பாடிப் பரவச மாய் நிற்கும் அழகை வருணிக்க வார்த்தையில்லை.

மிகப் பிற்பட்ட காலத்துக் கலைமுறையைச் சேர்ந்ததாக இருந்தாலும், அழகுடன் பொலியும் இந்த ஆடவல்லான் படிமம் மிகவும் பெருமை வாய்ந்ததாகும். தமிழகத்துக் கோயில்களில் எத் தனையோ ஆடவல்லான் படிமங்கள் காணப்பட் டாலும், மிகச் சிலவே தனிச்சிறப்பும், கலையழ கும், கருத்துப் பொலிவும், வாய்ந்தவையாய் விளங்குகின்றன. அவற்றுள்ளும் இத்திருவடிவம் குறிப்பிடத்தக்கது. ஆடவல்லான் செப்புத் திரு மேனிகளின் வழக்கமான அமைப்பு முறையிலிருந்து விலகி, காரைக்காலம்மை வேண்டிய வண்ணமே இறைவன் அருள, அந்த அருளாசிப்படியே ஆடும் ஆண்டவனின் அடிக்கீழ் அமர்ந்து பாடும் அழகை தன் நெஞ்சில் ஏற்றி, கைவழி கலையாய்ப்படைத் தளித்த வார்ப்பறிஞனின் இலக்கிய அறிவையும், கலைநோக்கையும் எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. கண்ணை மலர்த்தி, கருத்தை நிறைக்கும் இப்படிமம், கலை வரலாற்றுச் சிறப் புடைய ஒன்று எனில் அது மிகையாகாது.

# தில்லை நடராசர் ஆலயக் குடமுழுக்குத் திருவிழா

சமயாசாரியப் பெருந்தகையார்களால் பாடப் பெற்ற சிறப்பினையுடையதும், பஞ்ச பூதத்தலங் களுள் எல்லா பூதங்களும் தோன்றி நின்று விளங்க இடந்தந்து நிற்கும் ஆகாயத்தலமாகத் திகழ்வதும் இச்சிதம்பரமேயாகும்.

சபாபதியாக, சித்சபாநாதராக விளங்கும் இத்தலத்து மூர்த்தியை பதஞ்சலியும், வியாக்ரபாதரும் விதிப்படி பூசித்து அனவர தம் தரிசனம் செய்து கொண்டே இருக்கும் பேறு பெற்றனர். உபமன்யு முனிவரும் பூசித்துப் பாற்கடலைப் பெற்றதோடு பின்னர் நிறைந்த சிவானுபூதிச் செல்வராய், கண்ணபிரானுக்கே ஞானாசாரியனாக இருக்கும் பேற்றையடைந்தார். ''நம்பிரான் திருமூலன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் பாராட்டப்பெறுகின்ற திருமூலதேவ நாயனார் திருக்கூத்துத் தரிசனம் சிவானந்தக் கூத்து, திருவம்பலச் சக்கரம் முதலியவற்றால் ஞானக் கூத்தின் தனிப்பெருமைகளைத் தானும் அனுபவித்து, உலகிற்கும் உணர்த்தினார். சமயா சாரியர்களுக்குள் முதல்வராம் திருஞானசம்பந்தப் பெருமான் உண்ணிறைந்த ஞானத்தெழும் ஒரு பெருந்தனிக்கூத்தைத் தமது ஐம்பொறிவளவினும் எளிவரக்கண்ட அனுபவத்தை எடுத்து ஓதி, தில்லை வாழந்தணர் மூவாயிரவரையும் ஆனந்த நடராஜரா கவே காணும் திருவருள் வாய்ப்புப் பெற்றார். திருநாவுக்கரசு சுவாமிகள் காதலாகிக் கசிந்து கண் ணீர் மல்க, பசுகரணங்கள் சிவகரணமாகப் பெற்று ''அம்பலக்கூத்தனை தினைத்துணைப் பொழுதே னும் சென்றடைந்துய்யுங்கள்'' என உபதேசிக்கின் றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ளச் சிவகரணமாகி ஆனந்தக்கூத் தின் இன்பவெள்ளத்துத் திளைத்து உய்ந்தார். மாணிக்கவாசக சுவாமிகள் தில்லை பாதி திருவாச கமாகக்கனிந்து பாடி நம்மெல்லோரையும் உய்வித் தருள்கின்றார். மேலும் சேக்கிழார் பெருமான் ''உலகெலாம்'' என்று சிதாகாசப்பெருவெளியினின் றும் உண்டான செந்தமிழ்ச் சொல்லையே முதலா கக் வைத்துக்கொண்டு தொண்டர் சீர் பரவுவரா யினார். மற்றும் மறை ஞான சம்பந்தர், உமாபதி சிவம் முதலிய சந்தானச்சாரியப் பெருமக்கள் சாத் திரக் கருவூலத்தைத் திறந்து ஞானச்செல்வத்தை நாட்டவர் அள்ளிக் கொள்ளச் செய்தார்கள். இவ் வளவும் ஞானமா நடராஜப் பெருமானின் தனிப் பெருங்கருணையால் நாம் பெற்ற பேறுகள்.

இவ்வண்ணம் தமிழ்நாட்டுப் பெருமக்களின் உள்ளத்தைக் கவர்ந்த தில்லைக் தொல்பதியில் உலகப் பெருமக்கள் உய்யும் வண்ணம் சிற்றம்ப லத்து வீற்றிருந்தருளும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்திக்கு சம்புரோட்சண மகா கும்பாபிஷேகம், அட்சய வருஷம் தை மாதம் 29ம் தேதி புதன் கிழமை (21-2-1987) புனர்வசு நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 7.30க்கு மேல் 8.46க்குள் (காலை 9.30க்கு மேல் 10.09 மணிக்குள்) மீன லக்கினத்தில் நடைபெற இருக்கிறது. அவ்வமயம் ''சித்சபை'' ''கனகசபை'' கட்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும். பல பிறவிகளில் ஈட்டிய சிவ புண்ணிய மேலீட்டினா லேயே இத்தகைய தரிசனப்பேறு மிக அருமையிற் கிட்டுவதாகும். ஆதலால் சிவநேசச் செல்வர்களும் ஏனைய அன்பர்கள் அனைவரும் தவறாது வந்து தரிசித்து இம்மை மறுமைப் பயனை எய்த விரும்பு கிறோம்.

உ

# நெல்லைச் சீமையில் ஓர் அபிராமி பட்டர்


டாக்டர் பருத்தியூர்


K. சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.


அபிராமி அந்தாதி பாடிய அபிராமிபட்டர் தஞ்சைமாவட்டம் திருக்கடவூரில் தோன்றி வாழ்ந்தவர். உலகம்மை மீது கலித்துறை அந்தாதிபாடி அபிராமிபட்டரைப் போலவே அன்னையின் அருளைப்பெற்ற கவிஞர் சிங்கை நமச்சிவாயர். சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் நெல்லை மாவட்டத்தில் வாழ்ந்தவர். அம்பா சமுத்திரத்துக்கும் பாவநாசத்துக்கும் இடையில் தாமிரபரணிக் கரையில் அமைந்துள்ள விக்ரமசிங்கபுரம் என்ற ஊரில் சைவ வேளாள மரபில் முக்காளலிங்கர் என்பவருக்குத் திருக்குமாரராகத் தோன்றினார். ஆனந்தக் கூத்தர் என்பவர் இவரது மூத்த சகோதரர் ஆவார். அவரது புதல்வர் மாதவ சிவஞான யோகி என்பவரே சிவஞானபோதமென்னும் சைவ சித்தாந்த நூலுக்கும் பேருரை (மஹாபாடியம்) எழுதியுள்ளார்.

நமச்சிவாயர் பாபநாசத்தில் எழுந்தருளி இருக்கும் உலகம்மையிடம் பெரும் பக்தியும் ஈடுபாடும் கொண்டு பாமலைகள் பல புனைந்து வந்தார்.

'காவ்யா லாப விநோதினி' —அதாவது 'காவ்யங்களைப் பாடக் கேட்பதில் ஈடுபாடுள்ளவள்' என்று அம்பிகையினை லலிதா சகஸ்ரநாமம் புகழுகிறது. அதன்படி சிங்கை நமச்சிவாயர்பாடும் கவிகளை உலகம்மை விரும்பிக் கேட்டு மகிழ்வாள். அவரது கவிச்சிறப்பை மற்றையோரும் அறியும்படி செய்ய அம்பிகை திருவுள்ளம் கொண்டாள்.

இரவு நேரம்! அர்த்தஜாம தரிசனமும் செய்துவிட்டு சிங்கை நமச்சிவாயர் பாவநாசத்திலிருந்து விக்ரம சிங்கபுரத்துக்குக் கால்நடையாகத் திரும்பி வந்து கொண்டிருக்கிறார். வெற்றிலைப் பாக்கினை விரும்பிச் சுவைக்கும் புலவர் பெருமானின் வாய் நிறைய தாம்பூலம்! அவரது கவியினைக் கேட்கும் ஆவலுடன் அவர் அறியாதபடி அவரைப் பின் தொடருகிறாள் உலகம்மை! அன்று மாலை அர்ச்சகர் அணிவித்த அதே பட்டாடை அவள் திருமேனியினை அலங்கரித்திருக்கிறது! சிறிது தூரம் நடந்திருப்பார் கவிஞர். வாயில் குதப்பிவந்த தாம்பூலத்தைச் சற்றே பின்புறமாகத் திரும்பித்துப்புகிறார். அப்போது அங்கு யாரோ ஒரு பெண் செல்வது போன்ற அரவம் கேட்கிறது. ஆனுல் எவரும் கண்ணில் புலப்படவில்லை! வீடு சேர்ந்து விட்டார் புலவர்.



அடுத்தநாள் காலை அர்ச்சகர் ஆலயக் கதவம் திறக்கிறார். ''அபச்சாரம்! அபச்சாரம்!! ''என்று பதை பதைக்கிறார். ஆம்! மூலஸ்தானத்தில் உலகம்மை உடுத்தியிருந்த பட்டாடையில் தாம்பூலத் துவர் படிந்திருக்கிறது! கோயில் ஸ்தானிகர் மூலம் அப்பகுதிக்கு வருகை தந்திருந்த மதுரை மன்னனிடம் விவரத்தைத் தெரியப் படுத்தினர். மன்னன் வருந்தினான். ''குற்றவாளியினைக் கண்டு

பிடித்துத் தண்டனை கொடுப்பேன்'' என்றான். அத்துடன் திருக்கோயிலைப் புனிதமாக்கும் 'சம்பு ரோட்சணம்' செய்யவும் உத்தரவிட்டார்.

அன்றிரவு மன்னனின் கனவில் அம்பிகை தோன்றி நிகழ்ந்தனவற்றை விளக்குகிறாள். நமச்சிவாயரை உரிய முறையில் கௌரவிக்கும் படியும் கட்டளையிட்டாள். மகிழ்வுற்றமன்னன்புலவரை அழைத்தான். அவரது புலமையினையும் மகிமையினையும் அனைவரும் அறியும் படி செய்ய அந்தாதியொன்று பாடவேண்டினான். உலகம்மையின் திருக்கரத்தில் பூச்செண்டு ஒன்றினை வைத்து அதனைப் பொற்கம்பியினால் இறுகப் பிணைத்துக் கட்டச் செய்தான். புலவரே நீர் செண்டுவரப் பாடுக'' என்றான்.

'உலகே! என்று தொடங்கி கலித்துறை அந்தாதியினை உள்ளம் உருகப் பாடினார் நமச்சிவாயர்.—எழுபத்தொன்பதாவது பாடலில் அபிராமி பட்டருக்கு நிலவு வந்தது.— அதுபோல்:

''விண்தலம் நின்ற சரற்காலசந்ர சுவேதமுக
மண்டலமும் கைமலரோடு தோளின் வழிந்த
ரத்ன
குண்டலமும் பொலிவாலப்பிராயக் குமாரத்தி
யாய்ச்
செண்டலர் செங்கை உலகாள் என்நாவில்
சிறந்தனளே!''

என்ற இவரது அந்தாதியின் தொண்ணூற்றாவது பாடல் முடிந்தவுடன் பொற்கம்பி அறுபட்டு பூச்செண்டு புலவர் கைக்கு வந்தது! அனைவரும் அதிசயித்துப் போற்றினர். மன்னனும் சிறப்புக்கள் பல செய்தான்.

நமச்சிவாயரது மனைவி இறந்தபின் தனது மகளை வளர்க்கும் பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. அவர் ஒருநாள் உலகம்மையின் தரிசனத்துக்குச் சென்றிருந்த பொழுது புதல்வி பருவமெய்தி விட்டாள். பக்கத்து வீட்டு மாதிடம் விவரம் கூறி, புலவர் திரும்பியவுடன் அவருக்கு உணவு பரிமாறும் படி வேண்டினாள் புதல்வி.

ஆனால்! புலவரின் வீட்டு வாயிலில் அவரது புதல்வியின் வடிவத்தில் காத்திருந்து, வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று உணவும் பரிமாறி விட்டாள் பாவநாசம் உலகம்மை.

உணவருந்தி, கைகழுவ வெளியே வரும் சமயம் பக்கத்து வீட்டு மாது, புலவரின் புதல்வி பூப்பெய்தி தன் வீட்டில் இருக்கும் விபரம் கூறினாள். உலகம்மை மகள் வடிவில் வந்து உணவு பரிமாறியது புலவருக்கு அப்போதுதான் புரிந்தது!

நமச்சிவாயரின் முன் வினை காரணமாக அவருக்குக் குன்மநோய் ஏற்பட்டது. மிகவும் வருந்தி உலகம்மையிடம் முறையிட்டார். கல்யாண தீர்த்தமென்னும் நீர்நிலையில் மூழ்கி உயிர்விடத் துணிந்தார். அப்போது அம்பிகை அவர் முன் தோன்றி ''நமச்சிவாயரே! உமது முன்வினைக் கன்மம் முழுவதும் தொலைந்து விட்டது! இனி நீர் பிறவா முத்தியே எய்துவீர்'' என அருளிச் செய்தாள்!

உலகம்மை கலித்துறை அந்தாதி தவிர, இவர் உலகம்மை பதிற்றுப்பத்தந்தாதி, உலகம்மை கொச்சகக் கலிப்பா, உலகம்மை சந்தவிருத்தம், உலகம்மை பிள்ளைத்தமிழ், பாவநாசமென்னும் சிங்கை சிலேடை வெண்பா ஆகிய நூல்களும் இயற்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

உலகம்மை கலித்துறை அந்தாதியில் ஆங்காங்கே சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பொதிந்து கிடப்பதைக் காணலாம். திருஞான சம்பந்தப் பெருமானிடம் பெரும் பக்தியுடைய புலவர் அம்பிகை திருமுலைப்பால் அளித்த செய்தியினை மூன்றிடங்களில் பாடிமகிழ்கிறார்.

***



## காளிக்கு நீதி

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் ஜீவ காருண்யத்தைப் பெரிதும் வற்புறுத்திப்பாடியுள்ளார். தெய்வங்களுக்குப் பலி கொடுப்பதைக் கண்டித்து இவர் பல பாடல்களைப் புனைந்துள்ளார். திருவொற்றியூர் தியாகராசர் ஆலயத்திற்கு வடபுறமுள்ள காளி ஆலயத்தில் காளிக்குப்பலிகொடுப்பதை அறிந்து, இவர் அங்கே சென்று பலிகொடுப்பதைத் தடுத்துள்ளார்.

'ஒற்றியூர்க் காளீ உனக்கேனோ ஊன்விருப்பம்
வெற்றிமழு வோன்விருப்பு வேண்டாமோ-
சிற்றுயிரைக்
கொல்வார்க்கும் இன்பம் கொடாதான் அவன்
கண்டாய்
நல்வார்த்தை சொன்னேன் இந் நாள்''

என்பது காளிக்குத் தண்டபாணி சுவாமிகள் எடுத்துரைத்த அறிவுரையாகும்.

# உசரவிளை முத்தாரம்மன்

டாக்டர் ஏ. என். பெருமாள்

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உசரவிளை என்பது குமரிமாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர். நாகர்கோவில் நகரிலிருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தூரத்துக்குத் தெற்கிலும் கன்னியாகுமரியிலிருந்து சுமார் பதினைந்து கிலோ மீட்டர் மேற்கிலும் அமைந்த இந்த ஊர் அரபிக்கடலின்கரையில் உள்ளது. குமரிமாவட்டம் அடுத்தடுத்து அமைந்த பல சிறிய ஊர்களைக் கொண்டது. ஒவ்வொரு ஊரிலும் மக்கள் தொகை மிகவும் குறைவாகவே இருக்கும். ஆயினும் ஊருக்குப் பல கோயில்கள் இருக்கும். அவற்றுள் மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுவது முத்தாரம்மன் கோயில்.

உசரவிளையில் ஊருக்கு உரிமையான முத்தாரம்மன் கோயில் மிகச் சிறப்புடன் ஊரின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. கோயிலுக்கு மேற்கும் தெற்கும் சொத்தவிளை ஊரின் எல்லை படர்ந்து செல்கிறது. கோயில் கோட்டை மதில்கள் சூழ நடுப்பகுதியில் அமைந்து காணப்படுகிறது. அம்மனின் இருப்பு கல் மண்டபமாகவும், முன்பகுதி ஓட்டுக்கூரையுடைய அரங்கமாகவும் உள்ளது. கல் தூண்கள் கூரையைப் பலமாகத் தாங்கியுள்ளன. அரங்கவெளி இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

கீழ்பக்கம் இருக்கும் பெரிய அரங்கப்பகுதியில் ஆண்கள் அமர்ந்தும் மறுபக்கம் இருக்கும் சிறிய பகுதியில் பெண்கள் அமர்ந்தும் விழா நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பர். தெய்வ இருப்புப் பகுதி கோயிலின் தென்பக்கம் ஐந்தாகப் பிரிக்கப்பட்டிருக்கும். அவை மேற்கிலிருந்து முறையே பெருமாள் சுவாமி கோயில், பூசைப்பொருட்கள் வைக்கும் அறை, முத்தாரம்மன் கோயில், மாரியம்மன் கோயில், மடப்பள்ளி என ஐந்தாக அமையும், கோயில் வடக்கு முகமாக அமைந்துள்ளது. கோட்டை மதிலைச் சுற்றி ஐயனார் (சாஸ்தா), செங்கிடாய்க்காரன், ஒற்றை மாராப்பு, சுடலைமாடன், கருங்கிடாய்க்காரன், உச்சி மாரியம்மன் போன்ற காவல் தெய்வங்களின் பீடங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஐயனாருக்கு முதல் பூசையும் சுடலை மாடனுக்குத் தனிச் சிறப்பும் கொடுக்கப்படுகின்றன.

கோயிலின் கருவறையில் முத்தாரம்மன் ஆதி பராசக்தியாக, வலது பக்கம் ஆண்தெய்வமான பெரிய சாமியையும், இடது பக்கம் பெண் தெய்வமான பத்திரகாளியையும் துணையாகக்கொண்டு கொலுவிருப்புக் கொண்டுள்ளாள். முத்தாரம்மன் மூன்று முகங்கள், ஆறு கைகள், இரண்டு கால்களுடன் தீய அரக்கன் ஒருவனை மிதித்து பாம்புப் படத்தின் மீது இடக்காலை வைத்தவாறு வலக்காலை மடக்கி பீடத்தில் அமர்ந்துள்ளாள். முத்தாரம்மனின் முகம் புன்சிரிப்புடன் மக்களை அருள்பாவித்து மகிழ்கிறது. கண்களில் வீசும் ஒளிக்கதிர் உலகத்தையே நோக்கி மனித இனத்துக்கு அன்பையும் அருளையும் பொழிவதுபோன்று தோன்றும். அன்னையின் அருள்வழியும் ஒளி மேனியைக் கண்டு தலை வணங்கும் பக்தர்கள் மெய்மறந்து கவலை தீர்வதைக் கண்டு களிக்கலாம்.

மக்கள் முத்தாரம்மனை உலக நாயகியாகக் கருதி வழிபடுகின்றனர். மூன்று முகங்கொண்ட முத்தாரம்மன் கோயில்கள் உசரவிளை, சொத்தவிளை ஆகிய இரு ஊர்களிலும்தான் உள்ளன. மற்ற ஊர்களில் ஒரே முகத்துடன் அம்மன் காட்சி தருகிறாள். எல்லா ஊர்களிலும் அம்மை



உசரவிளை மாரியம்மன்

யும் அப்பனுமாக சிவ சக்தியாக ஆண் பெண் என இரு உருவங்களாக அமர்ந்திருக்கும் காட்சியைத் தான் பார்க்க முடிகிறது. ஆனால் உசரவிளையில் சிங்கத்தின் மீது கால் வைத்துள்ள பத்திரகாளி அம்மனுடன் கூடி மூவராக வீற்றிருந்து, மூன்று முகம் கொண்டு முத்தாரம்மன் அருள்காட்சி தருகிறாள். அவளது மேனி சிவப்பாகவும் பத்திர காளியின் வண்ணம் நீலமாகவும் காணப்படுகின்றன.


முத்தாரம்மனின் திருவுருவம் ஆடை அணிகளால் அழகுக் கோலமாக அலங்கரிக்கப்பட்டிருப்பது சுதைச் சிற்பக் கலைஞரின் கைவண்ணத்தின் தனித்திறனுக்குச் சான்றாகும். அன்னையின் கவினழகு கண்டாரைக் கவர்ந்திழுத்துக் கைகூப்பி வணங்கச் செய்யும் இறையாற்றல் மிக்கது. உருவில் அழகும் திருவில் சிறப்பும் அருளில் இறைப் பொருளும் மிக்க முத்தாரம்மை உசரவிளை மக்களின் பற்றுணர்வைப் பெருக்கிப் திருவருளைப் பொழிகிறாள் என்று அனைவரும் அசைவில்லா நம்பிக்கையுடன் வணங்கி வருகின்றனர்.

கார்த்திகை, பங்குனி ஆகிய மாதங்களில் ஊர் கூடி வரிப்போட்டு கொடைவிழாக்களை ஆண்டுதோறும் சீரும் சிறப்புமாக நடத்தி வருகின்றனர். கொடை விழாவின்போது ஊர் மக்கள் ஒன்றாகத் திரண்டு கூடிக்களித்து அம்மனின் அருளாசியைப் பெற வாழ்த்தி வணங்குவர். விழா ஒற்றுமை உணர்வைப் பெருக்கும் தன்மையுடையது. கொடை நடக்கும்போது உறவினர்கள் வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்து மகிழ்வர். அதன் பயனாக உறவு வலுப்பட்டு குடும்பங்கள் இன்பத்தில் மிதக்கும்.

கொடை விழாக்களில் முக்கியமாக வில்லுப் பாட்டு இடம் பெறும். நாட்டுப்புறத் தெய்வக் கதைகள் மிகுதியாகப் பாடப்படும். பாட்டுப் பாடும் வில்லிசைப் புலவர்கள் இடையிடையே மக்களின் அன்றாட வாழ்வுக்கு வகையாக உதவும் பயன்மிகு கருத்துக்களைப் பக்குவமாகத் தூவுவர். அத்தகைய அரிய கருத்துக்களைக் கேட்டு மது அருந்துதல், புகைப் பிடித்தல் போன்ற தீய பழக்கங்களைக் கைவிட்ட ஊரன்பர் உண்டு. களவு கொடுத்தவனின் துன்பத்தை விளக்கிக் கூறிக்களவு செய்வதைத் தடுக்க முயன்ற வில்லிசைக் கலைஞரும் உண்டு. வில்லுப் பாட்டை மனப்பாடமாக ஊர்மக்கள் தானாகப் பாடுவதைக் கேட்கலாம். கல்வியறிவு குறைந்த காலத்தில் வில்லுப்பாட்டு கேள்வியறிவாகப் பாமர மக்களுக்குக் கல்வியூட்டும் சாதனமாக விளங்கியது. மேலும் அறிவுரை கூறி மக்களின் வாழ்வை வளமாக்கவும் உதவியது.

வில்லுப் பாட்டுக்கு அடுத்த படியாக நையாண்டி மேளம், கும்பாட்டம் (கரக ஆட்டம்) போன்ற நாட்டுப்புறக் கலைகள் அம்மன்கொடை விழாக்களில் நடைபெறும். மக்கள் பெரும் ஈடுபாட்டுடன் அவற்றைச் சுவைத்து மகிழ்வர். சாமியாட்டம் இடையிடையே நடக்கும். தெய்வம் மனிதனின் மேலேறி ஆடுவதாக மக்கள் நம்பினர். ஆனால் இப்பொழுது சாமியாட்டம் செல்வாக்கு இழந்து விட்டது. சிந்தனை அறிவு சிற்றூர்களில் பரவி வருகிறது என்பதற்கு இத்தகைய நம்பிக்கை இழப்பு சான்றாக அமைகிறது.

தெய்வங்களுக்கு ஆடு கோழிகளை வெட்டிப் பலியிடுவது வழக்கம், இது உயிர்வதை என்ற உணர்வே இன்றி தெய்வவூட்டு என்று கருதி பலியிட்டு வந்துள்ளனர். அம்மன் கோயில்களில்புலால் சமையல் செய்துள்ளனர். உசரவிளை ஊரில்



**உசரவிளை முத்தாரம்மன்**

சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பே நாராயணப் பெருமாள் நாடார் என்ற ஊர்த் தலைவரின் தளராத முயற்சியால் பலியிடுதல் பெரும் எதிர்ப்புக்கு இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. அன்று முதல் இன்றுவரை காய்கறிச் சமையலே அம்மன் கோயிலில் செய்யப்படுகிறது.

முத்தாரம்மன் கொடை விழாவில், வந்துள்ள மக்கள் அனைவருக்கும் நண்பகல் நேரத்தில் இனிப்புக் கஞ்சி ஊட்டுவர். அதைப்படைப்புக் கஞ்சி என்று மக்கள் அனைவரும் தங்களிடம் இருக்கும் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் மறந்து ஒருவிதப் புனிதமான உணர்வுடன் ஒன்றாகக் கூடியமர்ந்து நன்றாக அருந்தி மன நிறைவு பெறுவர். இன்றுவரை எந்த விதமான தடையுமின்றி அந்தப் புதுமையான தானம் உசரவிளையில் தவறாது நடந்து வருகிறது.

முத்தாரம்மனைத் தங்கள் தாயாகவே நினைத்து ஊர் மக்கள் அனைவரும் வணங்கி வருகின்றனர். பூசை நடக்கும்போது அவர்கள் அன்னையை வணங்கிப் பணிந்து நிற்கும் காட்சி புனிதமானது. வேற்று சமயத்தினரும் இவ்வுணர்வை வியந்து பாராட்டியுள்ளனர். சிலையாகச் சிரிக்கும் முத்தாரம்மன் மக்கள் மனத்தில் நிலையாக அருள் பொழியும் அன்னையாக விளங்குகிறாள். குறை தீர்த்து நிறைவழங்கும் அம்மையாக அனைவரும் முத்தாரம்மனை நம்புகின்றனர். முத்தாரம்மனின் அருளாற்றல் உலக இருளைப் போக்கி மக்கள் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தும் புனிதவொளி என்பது ஊராரின் உறுதியான நம்பிக்கை.

# இளையான்குடி மாறநாயனார்

செவ்வேள்

''வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்'' என்பதும் நம் நாட்டில் வழங்கிவரும் பழமொழி. விருந்தோம்பலையும், இப்பழமொழியையும் ஒருசேர நினைப்பார்தம் கண்கள் முன்னால் தோன்றாமல் இருக்க மாட்டார் ஒரு நாயனார். அவர்தான் இளையான்குடி மாறநாயனார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடிக்கு வடகிழக்கே விளங்கும் சிறிய ஊர் இளையான்குடி. இன்றைக்கும் இவ்வூரில் புகழ்பெற்ற சிவாலயம் ஒன்று விளங்கிவரக் காண்கிறோம். ''முளைவாரி அமுதளித்த நாற்றங்கால்'' ''அமுதளித்த செய்'' என்று போற்றப்படும் வயல்களும் அவ்வூரில் உள்ளன.

வயல்களும் தம்மால் பெயர்கொண்டு விளங்க வாழ்ந்தவராம் இளையான்குடி மாறநாயனாரின் பெருமையை என்னவென்று உரைப்பது. அவர் சிதம்பரத்தில் நடம்புரியும் நடராசப் பெருமானின் அடியைத் தம் முடிமேல் சூடிய சிவபக்தர். சிவனடியார் யாவராயினும் தம் இல்லம் நோக்கி வந்தாரை எதிர்கொண்டு வரவேற்று வணங்கி அவர்கள் செவி குளிர அன்பு மொழிகள் கூறி, தம்முடைய வீட்டிற்குள் அழைத்துச் சென்று ஆசனத்தில் இருத்திப் பாதபூஜை செய்து, அறுசுவை மிக்க நாலு விதமான உணவுகளை மனம் விரும்பி விருந்து படைத்த அண்டர் நாயகரின் தொண்டரே மாற நாயனார்.

அவர் குபேரனின் தோழன் என்று பலரும் கூறத்தக்க அளவு செல்வ வளத்தாலும் மிக்கவர். ''அவருக்கு என்ன? கோடீஸ்வரர். அளவிற்கு மேல் செல்வம் இருக்கிறது. அதனால் சிவனடியார்களை உபசரிக்கிறார்.அதில் என்ன பெருமை இருக்கிறது'' என்பதாக வீணர் சிலர் ஏளனம் பேசியது, சிவபெருமானார்க்குக் கேட்டு விட்டது போலும், செல்வம் இல்லாத வறுமை நிலையிலும் கூட சிவனடியாரை உபசரிக்க அவர் தவற மாட்டார் என்பதை உலகிற்கு உணர்த்தக் குபேரரைக் குசேலன் ஆக்கிவிட்டார் சிவபெருமான். இதனைச் சேக்கிழார்.

''செல்வம் மேவிய நாளில் இச்செயல் செய்வ
தன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவான போதிலும் வல்லர்
என்றறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல மறைந்து
நாடொறும் மாறிவந்து
ஒல்லையில் வறுமைப்பதம் புக உன்னார்
தில்லைமன்னினார்''

—இளையான்-6

என்று பாடுகிறார்.

வளமை மாறி வாட்டும் வறுமை வந்துற்ற போதும் தம் விருந்தோம்பும் செயலை விட்டொழித்தாரா மாறனார்? இல்லை.

''இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்''

என்ற வள்ளுவர் வாய்மொழிக்குச் சான்றாக வாழ்ந்த சான்றாண்மை மிக்க மாறனார் பொருள் சுருங்கினாலும் மனம் சுருங்கினார் இல்லை. வீட்டில் உள்ள பொருள்களை ஒவ்வொன்றாக விற்று, சிவனடியார்களுக்கு அமுது படைத்தருளினார். விற்கப் பொருள்களும் இல்லாத வறுமை வந்துற்ற பொழுது கடன் வாங்கியும் சிவனடியார்களை ஓம்பினார். ''முன்னை மாறில் திருப்பணிக்கண் முதிர்ந்த கொள்கையர் ஆயினார்'' என்கிறார் சேக்கிழார்.

மாறனார் மட்டுமல்ல அவருடைய இல்லத்தரசியும் மங்கையர் திலகம் என மக்களால் போற்றப்படவேண்டும் எனத் திருவருள் பாலித்தார் தில்லை நடராசர். பெருமழை பொழிந்து கொண்டிருந்த ஒரு நாள் நள்ளிரவில், தவமுனிவராய் தாம் வேடந்தாங்கி மாறனாரின் வீட்டுக்கு எழுந்தருளினார். வறுமையின் கொடுமையால் மாறநாயனாரும், அவருடைய மனைவியாருமே பசித்திருந்த அந்த இரவு நேரத்தில் பாருக்கெல்லாம் படியளக்கும் பரந்தாமன் ஆகிய சிவபெருமான், சிவவேடம் தாங்கிய தவமுனிவராய், விருந்தினராய் எழுந்தருளிய விந்தையை என்னவென்பது?

விருந்தினராய் எழுந்தருளிய சிவனடியாரைக் கண்டு மனம் தளரவில்லை மாறநாயனார். மனம் மிக மகிழ்ந்து, விருந்தினரை எதிர்கொண்டழைத்து அடியாருடைய திருமேனியினை ஈரம் போக்கி ஆசனத்தில் அமரச் செய்தார். வந்த விருந்தினர்க்கு உணவூட்ட எண்ணிய மாறனார் தம் மனைவியாரிடம்



''நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாம்இன் அடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ஙனே அணங்கே''

—இளையான்-11

என வினவினார்.

ஔவையார் பசியால் வருந்தி வாடியபொழுது, அவரைக் கண்டு அனுதாபம் கொண்ட இல்லான் ஒருவன், தம் இல்லில் உணவு படைப்பதாக உறுதி கூறி ஔவையாரை அழைத்துச் சென்றான். வாசலில் ஔவையாரைச் சற்று நேரம் அமர்ந்திருக்கச் சொல்லிவிட்டு வீட்டிற்குள்ளே போனான். தன் மனைவியிடம் விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்று நேரடியாகக் கூற அவனுக்குத் துணிவுவரவில்லை. அவனுடைய மனைவி, முறத்திலே அரிசியை இட்டு அதில் கற்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள். இவன் அவள் அருகிலே அமர்ந்தான், முகத்திலே பட்டிருந்த தூசியைத் துடைத்து முகத்தைத் திருத்தினான். அவள் கூந்தலையும் சற்று நேரம் கோதி, அகப்பட்ட ஈரையும் பேனையும் நசுக்கினான். இத்தனை உபசாரம் செய்த தன் சொல்லைத் தட்ட மாட்டாள் தன் தர்மப் பத்தினி என்பது அவன் கணிப்பு. இருந்தாலும், ''விருந்தினரை அழைத்து வந்திருக்கிறேன்'' என்று கூற அப்பொழுதும் துணிவு பிறக்கவில்லை அவனுக்கு. மெல்ல துணிவை வரவழைத்துக் கொண்டு 'விருந்து வந்திருக்கிறது'' என்பதாக அவன் சொல்லி முடித்தானோ இல்லையோ, அவனுடைய மனைவி, அரிசியைப் பாத்திரத்திலே கொட்டிவிட்டு, அதைப் புடைக்கப் பயன்படுத்திய பழ முறத்தையே எடுத்துக் கொண்டு, தன்னுடைய கணவனை ஓட ஓட தெருவிலேயும் துரத்தி விரட்டி, தன் முறத்தினாலேயே அவனை நன்றாகப் புடைக்கவும் செய்து விட்டாள். இப்படிப்பட்ட பெண்ணொருத்தியின் வீட்டில் தாம் விருந்தாகச் செல்ல நேரிட்ட சோகத்தை ஔவையார்

## கலிகாலக் கொடுமைகள்

தாய்புத்தி சொன்னால் மறுத்திடும் காலம்உயர்
தந்தையைச் சீறும் காலம்
சற்குருவை நிந்தைசெய் காலம், மெய்க்கடவுளைச்
சற்றும் எண்ணாத காலம்

பேய்தெய்வமென்று மதித்திடும் காலம் நற்
புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டி வையினும் கேட்கின்ற காலம் மிகு
பெரியோர்சொல் கேளாத காலம்

தேய்வுடன் பெரியவன் சிறுமையுரு காலம்மிகு
சிறியவன் பெருகு காலம்
செருவில் விட்டோடினார் வரிசைபெறு காலம்வசை
செப்பு வோர்க்கு உதவும் காலம்

வாய்மதம் பேசிடும் அநியாயக் காரர்க்கு'
வாய்த்த கலிகாலம் ஐயா
மயிலேறு விளையாடு குகனே புல்வயல்நீடு
மலைமேவு குமரேசனே

—குமரேச சதகம்

''இருந்து முகம்திருத்தி ஈரொடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப-வருந்தித்தான்
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடஓடத் தான்''

என்று பாடியிருப்பதைக் காணலாம்.

ஔவையார் காட்டிய பெண் பேயாவாள். சேக்கிழார் காட்டும் மாறனாரின் மனைவியார் தாயாவார். தாய், தன்னுடைய குழந்தைக்குப் பசியறிந்து பாலூட்டுவாள். நேரம் கெட்ட நேரத்தில் குழந்தை கண்விழித்து தொல்லை தந்தாலும், தன் எல்லையற்ற அன்பினால் அதனைத் தொல்லையென எண்ணாமல் மகிழ்ந்து செயலாற்றுவாள். குழந்தையின் மேல் துரும்பு பட்டாலும் அவளுடைய தூக்கம் கெட்டு விடும். எறும்பு ஊர்ந்தாலோ அவளுடைய இதயமே வெடித்துவிடும். ''நல்ல தாய் அன்பின் தெய்வம்'' மாறானாரின் மனைவியாரும் அன்பின் தெய்வம். அதனால்தான் மாறனாரின் மனைவியார் அன்போடு கூறுகிறார். ''மற்றொன்றும் காண்கிலேன். ஏதிலாரும் இனித் தருவாரில்லை. போதும் வைகிற்று. போம் இடம் வேறில்லை. தீதுசெய் வினையேற்கு என் செயல்'' என்பதாக வருத்தம் கொண்டாலும் வந்தவிருந்தினரை உபசரிக்க வழி ஒன்று கண்டு கூறுகின்றது அந்தத் தாயுள்ளம்.

''செல்லல் நீங்கப் பகல்வித்திய செந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக்கொடு வந்தால்
வல்ல வாறமுமு தாக்கலும் ஆகும், மற்று
அல்ல தொன்றறியேன்''

—இளையான்-13

''பகலில் விதைத்த செந்நெல்லை வாரி வந்து அமுதாக்கலாம்'' என்பது மாறனாரின் மனைவியார் கண்டு சொல்லிய வழியாகும். உழவர்கள் எவ்வளவு துன்பம் வந்தாலும் கூழ் குடித்தாலும் கூழ் குடிக்காமல் போனாலும் அவர்கள் விதை நெல்லை மட்டும் வேறு காரியத்திற்காகப் பயன்படுத்த மாட்டார்கள். ஆனால் இங்கே மாறானாரின் மனைவியார் ''பகலில் விதைக்கப்பட்ட செந்நெல்லை வாரி வந்து அமுதாக்கலாம்'' என்று ஆலோசனை கூறினார் என்றால் அவர்தம் அன்பின் ஆழத்தை எப்படிப் போற்றுவது.

மனைவியாரின் மொழியைக் கேட்டதும்,வழி பிறந்து விட்டது எனப் பெரிதும் மகிழ்ந்தாராம் மாறனார். வானம் கிழிபட்டதோ என அஞ்சத்தக்க அளவிற்குப் பேய்மழை பொழிந்து கொண்டிருந்தது. பேரிருள் கூட்டமோ அச்சமூட்டுவதாய் இருந்தது. ஆனாலும் உள்ளத்தில் சிவனடியார்க்கு அமுது படைக்க வேண்டும் என்று பெருகிய அன்பு ஊக்கக் கூடை ஒன்றைத் தலையிலே கவித்துக் கொண்டு, கழனிக்குப் புறப்பட்டார் மாறநாயனார்.

''உள்ளம் அன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித்துக் குறியின் வழி
புள்ளுறங்கும் வயல்புகப் போயினார்
வள்ளலார் இளையான்குடி மாறனார்.''

—இளையான்-17

கால்களால் கழனிச் சேற்றைக் தடவிச் சென்றார் மாறனார். மழையினால் நெல்முளைகள் எல்லாம் ஒரு ஓரமாக ஒதுங்கியிருந்தன. அவற்றைக் கூடையிலே வாரி எடுத்துக் கொண்டு வீட்டிற்கு விரைந்தார் மாறனார். கணவரின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்து மாறனாரின் துணைவியாரும் நெல்லை வாங்கினார். சேற்றை அலம்பினார். நெல்லை வறுத்து அரிசியாக்க வேண்டுமானால் அடுப்பு மூட்ட விறகு வேண்டும். ஆனால் வீட்டிலோ விறகும் இல்லை. ''விறகில்லையே'' என்றார் அவர். உடனே மாறனார், தம் வீட்டுக் கூரையின் ஒரு பகுதியையே அறுத்து வீழ்த்தி அதில் கட்டப்பட்டிருந்த மூங்கில்களை எடுத்து ''இதோ விறகு தயாராகிவிட்டது'' எனக் கூறினார் என்றால் அன்பு பொங்கும் இந்தக் காட்சி ஒன்று போதாதா சிவனடியாராக வந்திருந்த சிவபெருமான் தம்பசி ஆறுதற்கு.

மாறனாரின் மனைவியார் அடுப்பினை மூட்டினார், நெல்லை வறுத்து அரிசியாக்கினார். உலையிலிட்டுச் சோறு சமைத்தார். சோறாக்கிய பிறகு தான் குழம்புக்கு என்ன செய்வது என்ற கவலையே வந்தது, அந்த அம்மையாருக்கு. உப்பில்லாத கஞ்சியே ஆனாலும் உள்ளன்பு உள்ளவர் அதைக் கொடுத்தால் அது அமுதமாய் ஆகிவிடும். ஆனால் அந்த அன்னையின் உள்ளமும், மாறநாயனாரின் உள்ளமும் வெறும் சோற்றினை சிவனடியார்க்குப் படைக்க விரும்பவில்லை. ஓடினார் தம் வீட்டுக் கொல்லைக்கு, இருட்டிலே அங்கு விளைந்திருந்த புன்செய்ப் பயிர்களை எல்லாம் பறித்து வந்து கொடுத்தார். அவருடைய துணைவியார் இலைக் கறிகளை ஆய்ந்தெடுத்து அலம்பினார். தூய பாத்திரங்களில் இட்டுத் தம் கைப்பக்குவத்தால் பல வகைக் கறிகளாக அதனை ஆக்கினார். முன்போல் செல்வமிருந்தால் அறுசுவை உண்டியாக அடியவருக்குப்படைக்கலாமே என்று தம் வறுமையை எண்ணி வருந்தியது அந்தத் தாயின் உள்ளம்.

''மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிகள் ஆய்ந்து
புனலிடைக் கழுவித்தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினால் வேறு வேறு கறியமு் தாக்கிப் ''பண்டை
நினைவினால் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று

—இளையான்-22

அமுது தயாராகிவிட்டது. இணையிலா சிவனடி யாரை அமுதுண்ணச் செய்வோம் என்று மாற னாரின் மனைவியார் மனமகிழ்ந்து கூற மாறனாரும் உறங்குவது போல் படுத்திருந்த அடியவரிடம் சென்றார்

''அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்டு அமுதுசெய் தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதில் சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவியாரும் தொண்டரும் திகைத்து நின்றார்.

—இளையான்-24

திருமாலிற்கும், பிரம்மாவிற்கும் எவ்வாறு சிவ பெருமான் சோதியாகத் தோன்றிக் காட்சி அளித் தாரோ, அத்தகைய ஜோதி வடிவமாகத்தோன்றி மாறனார்க்கும் அவர்தம் துணைவியாருக்கும் அவர் கள் வாழும் மனையைத் தேடிவந்து காட்சி அளித் தார் இறைவர் என்றால் ''தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே'' என்ற மொழியின் மெய்ம்மைதான் என்னே.


மாறனார் தம்பதிகள் காணக் கண்ணுதல் பெருமான் தம் சோதி வடிவத்தை மாற்றி, உமை யம்மையாருடன் உத்தமத் தம்பதிகளுக்குக் காட்சி அளித்து வரமும் அளித்தார்.

''அன்பனே! அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என் பெரும் உலகம் எய்தி இருநிதிக்கிழவன் தானே
முன்பெரு நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க வென்றே அருள்செய்தான் எவர்க்கு மிக்கான்

—இளையான்-26

குபேரனைப் போல் செல்வம் படைத்திருந்து, சிவ னடியார்க்கு அமுது படைத்த அருஞ்செயலால் குசேலர் ஆனவர் மாறநாயனார். அவரை அவ ருடைய அருஞ்செயலைப் போற்றிக் குபேரனுக்கே தலைவன் ஆக்கினார் கயிலையம் பெருமான். வளமையிலும், வறுமையிலும் செம்மை வழி மாறா மல் நிற்பார்க்கு ஈசன் என்றும் தண்ணருள் புரி வான் என்பதே இளையான்குடி மாற நாயனாரின் வரலாறு நமக்கு உணர்த்தும் உண்மையாகும். நல் லறமாய் இல்லறத்தை ஏற்று நடத்தும் ஞாலத் தோர் அனைவரும் மாறனாரையும் மாறனார்தம் மனைவியாரையும் போல், மனமொன்றி நல்லறமே போற்றி வாழ்வார்களாக.

***



## உலகாளும் தெய்வம்

இள நகையால் எம்மை யாளும்
எழில் நிறை தெய்வம்-அது
இனிய தான பரங் கிரியில்
இலங் கிடுந் தெய்வம்

வளங்க ளோடு நலங் களையும்
வழங்கிடும் தெய்வம் -செந்தில்
வந்தவர்க்கு அருள் கொடுத்து
வாழ்விக்கும் தெய்வம்

பழநியிலே பழம்நீயாக
படர்ந்துள தெய்வம்-வந்து
பார்ப்பவர்கள் இதயத்திலே
பதிந்திடுந் தெய்வம்

மொழிக்கு முதலாகி நின்ற
பிரணவத் தெய்வம் - எங்கள்
முத்தமிழின் தலைவனாக
திகழ்ந்திடும் தெய்வம்

ஏரகத்தில் குருவடிவாய்
எழுந்துள தெய்வம்-நல்ல
எண்ணங்களை மனத்திலே
வளர்த்திடும் தெய்வம்

சீரகமாம் பழமுதிரும்
சோலையின் தெய்வம் - சாந்த
திருத்தணியில் அமர்ந்துலகை
ஆண்டிடும் தெய்வம்

—டாக்டர் ஆறுமுகநாதன்



அங்கண்மா ஞாலத்
தரசர் அபிமான

பங்கமாய் வந்துநின்
பள்ளிக்கட் டிற்கீழே

சங்கம் இருப்பார்போல்
வந்து தலைப்பெய்தோம்

கிங்கிணி வாய்ச்செய்த
தாமரைப் பூப்போல

செங்கண் சிறுச்சிறிதே
எம்மேல் விழியாவோ?


திங்களும் ஆதித்தியனும்
எழுந்தாற்போல்

அங்கண் இரண்டும்கொண்
டெங்கள்மேல் நோக்குதியேல்

எங்கள்மேல் சாபம்
இழிந்தேலோர் எம்பாவாய்

—திருப்பாவை, 22.

பதிவு எண். எம் 7039



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.